
சுவடி : 44
ஏடு : 7
சனவரி 2020
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
**பெரியார்-நாகம்மை அறக்கட்டளை**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**86681 09047**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# நான்கு பிறவிச் சாதிகளை, ஆறாயிரம் உள்சாதிகளாகப் பிரித்தது பார்ப்பனியமே! பார்ப்பனப் புரோகிதமே!



இந்து மதத்தில் ‘‘சாதி’’ என்பது பிறவியால் ஏற்படுத்தப்பட்ட நான்கு வருணங்களை மட்டுமே குறிக்கும். நாம், வழக்கத்தில் ‘‘சாதி’’ என்பது - நான்கு பிறவிச் சாதிகள் கலக்கக் கூடாது என்றிருந்த தடையை மீறி, அப்படிக் கலந்ததனால்- **வருணத்தைக் கொலை செய்ததனால் உண்டான ஆறாயிரம் ‘உள்சாதி’களைக் குறிக்கும்.**

இதற்கான தரவுகள் இந்திய அரசின் மானிடவியல் ஆராய்ச்சித் (Anthropology) துறையினால் தொகுக்கப்பட்டுப் பல தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொகுதிகளில், உள்சாதிகள் ஆறாயிரம் பற்றிய பட்டியலும் உள்ளது.

அரசமைப்புச் சட்ட ஆராய்சிக்காக, நானும் கட்சித் தோழர் வேலூர் சா. குப்பன் அவர்களும் 2009 மார்ச்சுத் திங்களில் நாடாளுமன்ற நூலகத்தில் இவற்றைப் படித்தோம்.

அங்கேதான் - அப்பொழுதுதான் நேரு தலைமையில் அமைந்த குழுவினர், அரசமைப்புச் சட்ட ஆலோசகர் பி.என். ராவ் என்பவர் (B.N. Rau) எழுதிய ‘‘இந்திய அரசமைப்புச் சட்ட முதலாவது வரைவு (The First Draft of the Indian Constitution)’’ - மூலம் எங்களுக்கு எதிர்பாராமல் கிடைத்தது. நிற்க.

மேலே சொல்லப்பட்ட 6000 உள்சாதிகளுக்கும் வீட்டுச் சடங்குகளுக்கும் புரோகிதராகப் பார்ப்பனர்கள் வருகிறார்கள்; மணவினை நடத்துவதற்கு மதகுரு என்ற தோரணையில் பார்ப்பனர்கள் வருகிறார்கள்; சாவு நேர்ந்தால், கருமாதி நிகழ்ச்சிக்குப் பாப்பனர்கள் வருகிறார்கள். இவை மட்டுமல்லாமல் மற்ற நல்வினை, தீவினை ஆகிய எல்லாவற்றுக்கும் பார்ப்பனர்களே மதகுருவாக வருகிறார்கள்.

**இதனால்தான் 6000 உள்சாதிகளாக உள்ள இந்துக்கள், பார்ப்பனியத்தைக் கைவிட முடியாமல் திணறுகிறார்கள். இதை, இந்துவாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஏன்?**

உலகில் இந்து மதம் அன்னியில் பல்வேறு மதங்கள் இருக்கின்றன.

கிறித்துவம், இசுலாம், பவுத்தம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கிறித்துவர்கள் சிற்றூர் கோவிலில் பைபிள் படிப்பதற்குப் பாஸ்டர் (Paster) என்கிற பயிற்சியை அளிக்கிறார்கள். அங்குள்ள கிறித்துவர்கள் வீட்டில் நடக்கும் மற்ற சடங்குகளுக்கும் அவர்களே போகிறார்கள். அடுத்து, பெரிய மாதா கோவிலில் பைபிள் படிப்பதற்கு ஃபாதர் (Father) வருகிறார். அவர்கள் இறையியல் கல்லூரியில் - செமினரி (Seminary)யில் சான்றிதழ்ப் படிப்புப் படிக்கிறார்கள்.

அதற்கு அடுத்தாற்போல் மதகுரு (Bishop)வாக வருவதற்குத் தெய்வீக இளையர் (B.D. = Bachalor of Divinity) என்கிற பட்டம் பெறவேண்டும்; அல்லது கிறித்துவத் தத்துவ இளையர் (B.T. = Bachelor of Theology) படிக்க வேண்டும். இப்படிப் படிப்புத் தகுதி யினால் மதகுருவாக வரமுடியுமே தவிர, (Priest by qualification only), பிறவியினால் எந்தக் கிறித்துவரும் புரோகிதராக முடியாது.

அதேபோல், இசுலாமிய மதத்திற்கு, இசுலாமிய மதத்தைச் சேர்ந்தவர் அதற்கான படிப்புப் படித்தால்தான் குருவாக வரமுடியும்.

இசுலாமியர்கள் அரபுக் கல்லூரியில் (Arabic College) ஆறு ஆண்டுகள் படிக்க வேண்டும். அரபு மொழி, குர்-ஆன், ஷரியத் இவைகளை ஆறு ஆண்டு கள் கட்டாயமாகக் கற்க வேண்டும். அவர்கள்தான் மசூதியில் மவுல்வியாக வரமுடியும்; குர்-ஆன் ஓத முடியும். மற்றவர்கள் - எந்தப் பிரிவு இசுலாமியராக இருந்தாலும், இந்தத் தகுதியைப் பெறாமல், இசுலாமிய மதகுரு ஆகமுடியாது.

பவுத்த மதத்திற்கு மதகுரு என்கிற பிக்குவாக வர வேண்டுமானால், பவுத்த மதப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயில வேண்டும்.

**மேலே கண்ட-இந்து அல்லாத கிறித்துவம், இசுலாம், பவுத்த மதங்களில் இவை ஒவ்வொன்றிலும் எண்ணற்ற பிரிவுகள் இருக்கின்றன. ஆனால், பிறவி யில் எல்லோரும் சமமே. அதாவது, பிறவியில் எல்லாக் கிறித்துவர்களும் சமமானவர்களே; எல்லா இசுலாமியர்களும் சமமானவர்களே.**


**இந்து மதத்தில் மட்டும், கி.மு.1 முதல் இரண் டாயிரம் ஆண்டுகளாக - கி.பி.2020 வரையிலும் பிறவியில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்கிற நான்கு பிரிவுகளும் உண்டு. அந்தப் பிரிவு களுக்குள் முறைதவறி ஏற்பட்ட கலப்பினால், ஆறாயிரம் உள்சாதிகள் இருக்கின்றன என்பது மானக்கேடு ஆகும்.**

**நாம் பார்ப்பனியச் சடங்குகளை அறவே ஒழிக்க வேண்டும். பார்ப்பனர் மட்டும் பிறவியில் உயர்ந்தவர் கள் என்று எண்ணுவதும், நடப்பதும், அதைப் பழக்கத்தில் இன்னமும் இரண்டாயிரம் ஆண்டுகளாக மேற்கொள்ளுவதும் மிகவும் இழிவானதாகும்.**

**பார்ப்பனியம் ஒழிப்போம்!**

**1.1.2020** **- வே. ஆனைமுத்து**

**திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்**
**பேராசிரியர் க.அன்பழகன்**
**அவர்களின் 98ஆம் பிறந்தநாள்**



திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் கடந்த 19.12.2019 அன்று தன்னுடைய 98 ஆம் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடினார். உடல் நலத்தோடு உள்ளார். பேரா சிரியர் க.அன்பழகன் அவர்கள் நூற்றாண்டு கடந்து வாழ்கவென வாழ்த்துகிறோம். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி.

## வாழ்க்கை ஒப்பந்த விழா

## தி.இராசகுமாரி-சி.சக்திகுமார்

முருக்கன்குடி வே. ஆனைமுத்துவின் தம்பி, மறைந்த வே.இளங்கோவன்-மறைந்த இ. சரோசா ஆகியோரின் மகள்வழிப் பேத்தியும், முருக்கன்குடி வெ.வீரமுத்து-சின்னம்மாள் ஆகியோரின் மகன்வழிப் பேத்தியும், வீர.திருமாவளவன்-மஞ்சள்அழகி ஆகி யோரின் மகளுமான **தி. இராசகுமாரி;**

கோனேரிப்பாளையம், ஆனைமுத்து-அய்யம் மாள் ஆகியோரின் மகன்வழிப் பேரனும், மறைந்த வேலாயுதம் - மறைந்த செல்லம்மாள் ஆகியோரின் மகள்வழிப் பேரனும், மறைந்த ஆ. சிவலிங்கம் - சிவபாக்கியம் ஆகியோரின் மகனுமான **சி.சக்திவேல்** இருவருக்கும் 15-12-2019 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணிக்கு, பெரம்பலூரில் சின்னமணி இராசேஸ்வரி திருமண மண்டபத்தில் சுற்றமும் நட்பும் சூழச் சிறப்புற வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது.

வாழ்க்கை ஒப்பந்த விழாவில், வே.ஆனை முத்துவின் குடும்பத்தின் சார்பில், ஆனை. பன்னீர் செல்வம், அரி. தமிழ்ச்செல்வி-அரிமாப் பாண்டியன் இணையர், தமிழரிமா, வெற்றி-விஜயலட்சுமி இணையர், க. இராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

# தமிழர் பண்பாட்டில் பொங்கல் திருநாள்

- முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

**பொ**ங்கல் என்பது தொழிற்பெயர்; தொழில்கள் எல்லாவற்றுக்கும் மூலத்தொழில் 'உழவுத் தொழில்'. அதனால் பொய்யாமொழியார்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"

என்றார். உழவர் தொழிலாளரைச் சார்ந்து வாழ்பவர். பதினெண் குடியினர் - தொழிலினர் என்று முன்னை நாளில் கணக்கிட்டனர். உழவர் உழுது பாடுபடாமல் கையைக் கட்டிக் கொண்டால், எப்பற்றும் இல்லேம் என்னும் துறவரும் வாழார்! என்பதை,

'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை' (1036)

ஏன்எனில், உழவர் எவரையும் இரந்து வாழார்; இரந்து வந்தவர்க்கு இல்லை எண்ணாது ஈவர் என்பதால்!

"இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்" (1035)

தம் உழைப்பாலேயே வாழ்பவர்; அவர் மட்டுமல்லர், வழி வழியாக உழுதொழில் செய்பவர் அவர்!

உலகம் சுழல்வது உண்மை; அச்சுழற்சியால் மட்டும் மாந்தர் வாழ்ந்துவிடமுடியாது! உழவன் தன் நிலத்தில் ஏரைப் பூட்டி உழுது சுழல வேண்டும் என்பதை,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (1031)

என்றார் அறம் பாடிய கிழவர் வள்ளுவர்.

கிழவர் என்பார் மண உரிமையர்; வாழ்வுரிமையர்; நில உரிமையர்; அவர் நீர் இறைக்கும் இறைவைச் சால், கிழார்!

நிலக்கிழார் தந்தவை பண்பாடு, ஒப்புரவு, ஈகை, விருந்தோம்பல் என்பன.

**பண்பாடு**

'பண்'ணிசை செவிக்கு இன்பம் தரும்
பண்பாடு வாழ்வுக்கு மூலம்'!

உழவன் உழவு, கட்டி உடைப்பு, எருவிடல் எனப் பண்படுத்துகிறான் விளை நிலத்தை!

அவன் படுத்தமும் உழைப்பும் வெளிப் படக் காட்டுவது விளைவு.

'விளையறா வியன் கழனி
கார்க் கரும்பின் கமழாலை'

என்பது பட்டினப்பாலை.

நெல்லும் கரும்பும், வாழையும் கமுகும், மஞ்சளும் இஞ்சியும்-விளங்கும் விளைநிலம் உழவன் பண்படுத் தலுக்கும் உழைப்புக்கும் சான்று.

முள்ளும் முடலும், கள்ளியும் கற்றாழையும், வேலிக் கருவேலும்-உழவன் உழையாமைக்கும் பண்படுத் தாமைக்கும் சான்று.

நிலத்தைப் பண்படுத்தா மடியன் (சோம்பன்) வாழ்வு மடிந்து போகும் சான்று!

உழவன் தந்த பண்படுத்தல் சான்று, வாழ்வியல் பண்பாட்டு மூலம்!

அதனைக் கலித்தொகை,

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்"

என்கிறது. பாடு என்பது மெய்ப்பாடு!

தம் முன்னால் நிற்பவர்-இருப்பவர், எந்நிலையில் உள்ளாரோ அந்நிலை அறிந்து நடந்து கொள்ளுதல் பண்பாடாகும். இதனைப் 'பண்புடைமை' என்றோர் அதிகாரமாகத் திருக்குறள் தந்தது (100).

**ஒப்புரவு**

உழவன் நிலத்தை ஒப்புரவு செய்வான். உழுவான்; வரப்பு ஓரம் வெட்டுவான்; சால் அடிப்பான்; மேடுபள்ளம் இல்லாமல் சமன்படுத்துதலால் ஒப்புரவு செய்வான்! ஏனெனில், ஒப்புரவு செய்யாமல் மேடுபள்ளமாக இருந்து நீர்விட்டால், மேட்டில் நீர் ஏறாது; போட்ட வித்து முளையாது; பள்ளத்தில் நட்ட வித்து முளைத்தாலும் அழுகிச் செத்துப்போம். ஒப்புரவில்லாமை இரட்டைக் கேடாம்! பொதுவுடைமையோ-சமுதாயமோ- தோன்று வதற்கு முன்னர் உழவன் வழியே தமிழன் - தமிழினம் - கண்டது ஒப்புரவு.

'ஒப்புரவறிதல்' என்பது வள்ளுவத்தில் ஓரதிகாரம் ஆனது (22). ஒப்புரவு எங்கும் காணரிய உயரிய பண்பு. அனைவருக்கும் கைம்மாறு கருதாமல் பெய்யும் மழை போன்றது; ஊருணி நீர் நிறைந்தது போன்றது; உள்ளூரில் பழமரம் பழுத்தது போல்வது; பசிநோய் முதலாம் நோய்களுக்கு மருந்து போன்றது என்று வள்ளுவர் விரித்துக் கூறுவார்.

வள்ளலார்,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எல்லாரும்
ஒருநிலையர் ஆதல்"

என அரிய விளக்கம் தருவார்.

**ஈகை**

ஒப்புரவுக்கு அடுத்த அதிகாரம் ஈகை. ஈகையாவது கொடை (23).

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" (221)
"அற்றார் அழிபசி தீர்த்தல்" (226)
"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்" (225)
"ஈத்து உவக்கும் இன்பம்" (228)

என ஈகைச் சிறப்பை இனிதின் விளக்குகிறார். வள்ளலார் உள்ளப் பதிவாம் பசியாற்றல் தலைப்பட்டு நிற்பது இவ்வதிகாரம்.

**விருந்தோம்பல்**

இல்லறத்தான் கடப்பாடுகளுள் விருந்தோம்பல் தனிச்சிறப்பினது.

"விருந்தே புதுமை" என்பது தொல் காப்பியம். தொல்காப்பியர் வழியில் முப்பால் யாத்த திருவள்ளுவர், விருந்தோம்பலை ஓர் அதிகாரமாகப் பாடுகிறார் (9). வந்த விருந்தினரை எதிர்பார்த்திருத்தல் இல்லற வாணன் கடமையாக்கிய அவர், அந்நாளில் தமிழகத் துப் புகுந்த வேள்வியை எண்ணி வருந்துகிறார்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலைக் கண்டிக்கும் அவர் (259), விருந்தோம்பலாம் வேள்வியைச் செய்ய ஏவுகிறார்.

பசித்து வயிறு எரிபவனுக்கு உயிர் மருந்தாகிய பால், வெண்ணெய், நெய், அரிசி, பருப்பு முதலியவற் றையும், பருவிலையபட்டு துணிமணி உயிரி என்பவற் றையும் பாழாகக் கொட்டுதலை எண்ணி,

"இனைத்துணைத் தென்பதொன்றில்லை
விருந்தின்
துணைத் துணை வேள்விப் பயன்" (87)

என்றும்,

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (88)

என்றும் கூறுகிறார்.

தமிழர் பண்பாட்டின் மூல வைப்பகமாம் திருக்குறளை வாழ்வியலாகக் கொள்ளாமல் வேறு வேறு நெறி பற்றல்,

"கனியிருப்பக் காய் கவர்ந்தேயாம்".

வாழிய நலனே! வாழிய நிலனே!



## "தமிழனுக்காக நான் பலிகடா ஆகிறேன்"

''இருந்தால் என் வைப்பாட்டி மகனாக இரு; இழிமகனாக இரு; இல்லாவிட்டால் நாட்டைவிட்டு, இந்து மதத்தைவிட்டு வெளியேறு. அல்லது ஜெயிலில் இரு என்றால் : இது உங்கப்பன் உங்க அம்மா சம்பாதித்த நாடா? அவர்கள் பிறந்த நாடா? என் நாட்டில் உனக்கு என்ன வேலை? வெளியேறு, வெளியேறு, வெளியேறு, மான வெட்கங்கெட்டவனே, வெளியேறு'' என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

**சமுத்திரம் எனக்கு முழங்கால் அளவு தண்ணீர்தான். அட முட்டாள்களா, உங்களுக்கும் சேர்த்துத்தானே பாடுபடுகிறேன்.**

விஷமப் பிரச்சாரம் செய்யும் உங்களில் ஒருவன் வாயில்கூட 'நான் ஏன் சூத்திரன்' என்பது வருவதில்லையே! டில்லியோடு எழவு எடுப்பதற்கு முன் உங்களோடு எழவு எடுக்கவேண்டியிருக்கிறதே!

**தமிழன் யோக்கியதை எனக்குத் தெரியும். 75 வருடமாய் தெரியும். தமிழனுக்கு ஆக நான் பலிகடா ஆகிறேன்.**

**மானமுள்ளவர்கள் வாருங்கள். முடியாத யோக்கியர்கள், யோக்கியர்களுக்கு பிறந்தவர்கள் வாலை அடக்கிக்கொண்டு யோக்கியமாய் வாழுங்கள்.**

— தந்தை பெரியார்
("விடுதலை" 15.11.73)

## நூல் மதிப்புரை

## பெரியாரின் தோழர். மணம்பூண்டி கோடை இடி ம.ரா. குமாரசாமி வரலாறு




ம.ரா.கு. தணிகை கலைமணி வெளியிட்ட ம.ரா.குமாரசாமியார் வரலாறு நூலினை வரப்பெற்றோம்.

இந்நூலின் விலை **ரூ.250/-**

கிடைக்குமிடம் :
**ம.ரா.கு.தணிகை கலைமணி**
காந்தி சாலை, மணம்பூண்டி - 605 759.
விழுப்புரம் மாவட்டம்.
கைப்பேசி : 944387978

# கல்வி

- இரா. பச்சமலை

கல்வியின் நோக்கம், அதன் இலக்கணம் என்பன குறித்து உலக அளவில் பல அறிஞர்கள் பல அரிய கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவரவர் தாம் வாழ்ந்த சமூகச் சூழலையும் உலகச் சூழலையும் கருத்திற் கொண்டு சொல்லியுள்ளனர். 'வாழ்க்கையையும் உல கையும் பற்றிய பார்வையைத்' தருவது கல்வி என்கிறார் பெர்ராண்ட் இரசல், 'மனிதனுக்கான நெறிகளை வரை யறுப்பது'தான் கல்வி என, தாம் ஆசிரியர்களுக்கான உரை நிகழ்த்தும் போதுத இமானுவல் கானட் தெரிவித்தார். கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது என்றார். விவேகானந்தர். இன்னும் பல அறிஞர்களின் கல்வி பற்றிய கருத்துகளை எடுத்துச் சொல்லலாம். அடிப்படையில் கல்வி சமூக மேம்பாட்டுக்கானது என்று சொல்ல முடியும். இது தனிமனித மேம்பாட்டையும் அளிக்கவல்லது. ஆனால் பார்ப்பனியம் கல்வியை-அதன் உள்ளடக்கத்தைப் படிப்பு என்ற அளவில் மட்டும் வஞ்சகமாகத் திட்டமிட்டுச் சுருக்கிக் கொண்டு பரப்பி விட்டது. படிப்பு "வளர்ச்சி" என்ற உள்ளடக்கத்தை மட்டும் கொண்டுள்ளது. தனிமனித மேம்பாட்டைக் கூடப் 'படிப்பு' இலக்காகக் கொள்ளாது. பின் எப்படிப் படிப்பு சமூக மேம்பாட்டைத் தரும் என்பது அடிப்படை வினா.

ஆனால் இங்குள்ள அரசுகள் கல்வியின் பொருண் மையைப் புறந்தள்ளிவிட்டுப் பார்ப்பனியத்துக்கு அடி பணிந்து வெறும் படிப்பைத் தருவதோடு நின்றுவிட்டது என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. மேலும் அந்தப் படிப்பைக் கூடப் பன்னெடுங்காலம் சமயத்தின் பேரால், கடவுள் பேரால் பார்ப்பனரின் முற்றுரிமையாக வைத்துக் கொண்டு, பெரும் திரளான மக்களுக்கு அது மறுக்கப்பட்டே வரப்பட்டுள்ளது. இதன் விளைவால் நாடு வளர்ந்துள்ளது என்று சொல்லி வருவதைத் தான் ஏற்கலாம். எனவே சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட சிறு கூட்டம் மட்டும் வளர்த்துவிட்டது எனலாம். அந்தக் கூட்டம் கூட மேம்பாடடைந்துள்ளது என்று சொல்ல முடியாது. அக்கூட்டம் சமூக மேம்பாடைத் தம் கருத்தில் கொள்ளவே முற்படாது என்பதுதான் உண்மை. அதே நேரத்தில் இந்தப் பாழான படிப்பு கூட வெகு மக்களுக்கு இக்காலக் கட்டத்திலும் மறுக்கப்பட்டு வருகின்றது.

2020-இல் நம் நாட்டின் படிப்பறிவு எந்த அளவில் உள்ளது என்பதைப் பார்ப்போம். 1947-இல் நாடு விடுதலை பெறும் காலத்தில் சமூகத்தின் பெரும் திரளான மக்கள் படிப்பு மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர்; 1947இல், எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 16% தான். அவர்கள் எல்லோரும் விடுதலை பெற்று 73-ஆம் ஆண்டான 2020இல் ஆண்டில் மறைந்திருக்கக் கூடும். ஆனால் 2011 மக்கள் கணக்கெடுப்பின்படி நாட்டில் எழுத்தறிவற்றோர் 27 விழுக்காடு. இவர்கள் எல்லோரும் விடுதலை பெற்ற நாட்டில் எழுத்தறிவற்றோராக ஆக்கப்பட்டவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சென்ற 9-10 ஆண்டுகளில் மக்களுக்கு எழுத்தறிவு அளித்திட இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு, கேரளம், மகாராட்டிரம் போன்ற சில மாநிலங்களில் தவிர, நாட்டின் பிற மாநிலங்களில் மக்களின் படிப்பறிவு அளவை உயர்த்திட பொதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவே இல்லை. எனவே வரும் 2021 - மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் நாட்டின் எழுத்தறிவற்றோர் அளவு பெரிதும் குறைந்திடாது 25 விழுக்காடு வரை இருக்கக் கூடும். எனவே தற்போதைய சூழலில் பள்ளிப் படிப்பை மக்கள் அனைவரும் பெற்று, படிப்பறிவு அற்றவரே இல்லை என்ற இலக்கை நோக்கித்தான் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் பயணிக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன?

மேலும் இந்தப் பள்ளிப் படிப்பைக் கல்வியாக உயர்த்துவதற்கு அனைத்துப் பள்ளிப் படிப்பும் தாய்மொழி வழியில் மாற்றப்பட வேண்டும். கல்வி-தான் அனைத்து சமூகத்துக்குமான மேம்பாட்டை உறுதி செய்யும் என்பது முன்பே சொல்லப்பட்டுள்ளது. இன்னும் இந்தப் பள்ளிக் கல்வி அனைத்தும் இலவயமாகக் கொடுக்கப் பட வேண்டும். தனியாரால் தரப்படும் தாய்மொழிக் கல்வியும் அனைத்துத் தளமக்களையும் மேம்பாட்டுத் தளத்திற்கு உயர்த்தாது. ஏனெனில் தனியார் எங்கும் எவ்வழியேனும் ஈட்டும் இலாபம் பெருமளவுக்கு இருக்க வேண்டும் என்ற மனநிலையுடையவராகத்தான் இருக்க முடியும். எனவே இலவயப் பள்ளிக் கல்வி அரசால் மட்டுமே தரப்பட முடியும். அத்துடன் பள்ளிக் கல்வியை மாநிலப் பாடத் திட்டம், ஒன்றிய அரசுப் பாடத் திட்டம் என்பன போன்ற பலவகையான பாடத் திட்டங்களில் அளிக்க முற்படுவது ஏற்றத்தாழ்வான கல்வி முறையை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும். எனவே ஒரு மாநிலத் தின் பள்ளிக் கல்வி தாய்மொழி வழியில், இலவயமாக ஒரே ஒரு வகையான பள்ளிப் பாடத் திடடத்தின் படி வழங்கப்பட வேண்டும். இதைச் சனநாயக இந்திய ஒன்றிய அரசு சனநாயகப் பொறுப்பின்படி மேற்சொன்ன முறையில் பள்ளிக் கல்வியை அளித்திட முன்வர வேண்டும்.

ஆனால் இந்த அடிப்படை நியதிகளையெல்லாம் முற்றும் புறக்கணித்துவிட்டுப் பொதுவாகக் கல்வி முழுமையையும் தனியார் முதலாளிகளிடம் தாரை வார்த்துவிட்டு, கல்வித் துறை முழுமையையும் ஒரு ஒட்டுமொத்தமாக கொள்ளைக் காடாக மாற்றிவிட்டு, வெகுமக்களான ஒடுக்கப்பட்ட மக்களை கல்வியின் பெயரால் ஒரு கொடுஞ் சுரண்டலுக்கு ஆளாக்கி அல்லலுறச் செய்து விட்டு, ஒன்றிய மாநில அரசுகள் மக்களனை வருக்கும் கல்வி அளிக்க வேண்டிய கடமையை முற்றும் பொறுப்பற்ற வகையில் உதறித் தள்ளிவிட்டு, சமூக மேம்பாட்டுக்கான கல்வியை ஒரு வணிகச் சரக்காக மாற்றி சமூகக் கேட்டைப் பரவலாக்கி விடப் பட்டுள்ளது பெரும் அவலம். இந்தப் பின்னணியில் இதனினும் கொடுமையாக மக்கள் அனைவருக்கும் கல்வியை, வேண்டாம், படிப்பைக் கூட அளித்திடக் கூடாது எனக் கங்கணங் கட்டிக் கொண்டு நாடு முழுமைக்குமாக ஒரு தேசியக் கல்விக் கொள்கை என்ற புதிய திட்டத்தை வகுத்து வைத்துக் கொண்டு, எப்பொழுது வேண்டுமானாலும் நாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டு மக்கள் சனநாயக அடிப்படைக் கல்வி உரிமையைக் கூடப் பறித்திட இந்திய ஒன்றிய பா.ச.க. அரசு ஆயத்தமாக உள்ளது.

**இந்தப் புதிய தேசியக் கல்விக் கொள்கை தரமான படிப்பை உறுதிசெய்வதற்கான வரைவுத் திட்டம் எனச் சொல்லப்படுகின்றது. படிப்பின் தரத்தை உயர்த்துவதற்கு வரைவுக் கல்வித் திட்டம் எதிர்மறையான நிலைப்பாட்டினை மேற்கொண் டுள்ளதாக உள்ளது. மேலும் படிப்பு தொடர்பான பணிகள் யாவற்றையும் தனியாரிடம் அளித்திட ஒன்றிய அரசு முனைகிறது. இதிலிருந்து இதன் உள்நோக்கம் வெகுமக்கள் படிப்புப் பெறுவதி லிருந்து அகற்றுவதாக உள்ளது.**

படிப்புத் தரம் உயருவதற்கு மாணவர்களைப் பல நிலைகளில் 3ஆம், 5ஆம், 8ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் வகுப்புகளில் பொதுத் தேர்வு எழுதிட வைப்பது என்று திட்டமிட்டுள்ளது. இது அடிப்படைத் தரம் உயர்த்தும் நோக்கிற்கு முற்றிலும் முரணானது என்பதுடன், எதிர்மறையாக தரத்தைத் தாழ்த்துவதாகத்தான் அமையும். கல்வி முறையின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே எதிரானது, இந்தப் பல கட்டத் தேர்வு முறை. மாறாக இதன் உள்நோக்கம் அடித்தட்டுச் சமூகத்திலிருந்து படிப்புக்கு நுழைபவர்களைத் தேர்வு என்று சொல்லி அச்சுறுத்திப் பள்ளிகளுக்குள் நுழையவிடாமல் தடுப்பது, தடைசெய்வதாகும்.

உண்மையில் கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டு மெனில், கற்பித்தல் திறன் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அடிப்படை. அதாவது கற்பித்தல் திறன் உயர கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கும் இக் கொள்கை வரைவு ஆசிரியர்களுக்கும் பல நிலைகளில் தேர்வு நடத்தி அதன்வழி அவர்கள் தரம் மேம்படுத்த முனைந்துள்ளது. இதுவும் ஆசிரியர்களிடம் எதிர்மறை விளைவைத்தான் ஏற்படுத்தும். அதாவது தரம் உயர்த்தல் என்ற பெயரில் மாணவர்களை, ஆசிரியர்களைக் களையெடுத்தல் என்பதுதான் உள்நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மாறாகக் கற்பித்தல் திறன் உயர்த்தப்பட முதலில் கல்விக் கூடங்களில் ஆசிரியர் களுக்குப் போதுமான பயிற்சிகளை ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஆண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு என ஒருமுறையாவது அளித்து அவர்களின் புரிதலைப் பெருக்கிடத்தான் வழிகாண வேண்டும்.

மேலும் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் திறனைப் பெருக்குவதுடன் அவர்களின் சமூகப் பொறுப்பு மிகவும் உயர் மதிப்புடையது என்று உணர்த்திட ஆவனவெல் லாம் செய்திடத் திட்டமிட வேண்டும். இதற்குக் கால அளவு என்பதை வரையறுக்க முடியாது. இது ஒரு தொடர்ச்சியான நெடும் காலத்திற்கானது. ஆசிரியருக் கான இந்த உள்ளீடு மிக மிக முதன்மையானது. இந்த வகையில் அவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு மிகவும் வல்லமை படைத்த சமூகப் பொறுப்பை உணர்த்த செயல்பாட்டாளர்களாக விளங்கும், சமூகவியலாளர் களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இன்னும் குறிப்பாகச் செய்முறைப் பயிற்சியாக ஆசிரியர் கள் ஒரு கால அளவில் கள ஆய்வில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களிடையே இந்தக் களத்தில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களையே முன்காட்டாகக் கொண்டு பிறகும் தங்களை உயர்த்திக் கொள்ள ஏதுவாக இவர்களுக்கிடையில் சீரான, செறிவான கலந்துரையாடல்களுக்கான வாய்ப்புகள் திட்டமிட்டு ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

பயிற்சி, களஆய்வுகள் எல்லாம் இயலக்கூடியதா என்று எண்ணலாம். ஆனால் அது நமது போதாமை யைக் காட்டுவதாகத்தான் அமையும். காட்டாக, சப்பான், அய்ரோப்பிய நாடுகளில் ஆசிரியர்களுக்குத் தொடர் நெடும் பயிற்சிகளும் தரப்படுகின்றன. அவர்கள் தத்தம் நாடுகளில் மட்டுமின்றிப் பிற நாடுகளில் மேற்கொள்ளப்படும் கற்பிக்கும் திறனை மேம்படுத்த எடுக்கப்படும் செயல் திட்டங்களையும் அறிந்து வரு வதற்குக் கள ஆய்வுக்கு அரசால் அரசின் செலவில் அனுப்பப்படுகிறார்கள். அவர்களை ஆய்வு விவரங்க ளையும் ஆய்வு முடிவுகளையும், தத்தம் நாட்டுக்கு ஏற்ற வகையில் பின்பற்றத்தக்க பரிந்துரைகளையும்

அந்தந்த நாட்டு அரசுகள் ஆய்வுக்குட்படுத்தி, தேவை யானவற்றை செயல்படுத்திப் பொதுவாகக் கல்வியின் தரத்தினை உயர்த்திட ஆவனவெல்லாம் செய்து வரு கின்றனர். எனவே ஆசிரியர்கள் நலந்தான் நாட்டின் நலன். ஆசிரியர்களின் பங்குதான் நாட்டின் மேன்மைக் கும் மேம்பாட்டுக்கும் உரியது என்ற கண்ணோட்டம் அரசின் அடிப்படையாக இருக்க வேண்டும். எனவே ஆசிரியர்கள் நன்மதிப்புக்குடையவர்கள் என்ற உளவியல் உருவாக்கப்பட வேண்டுமேயன்றி அடிமைத்தளை பூட்டும் குருபக்தி, குரு வழிபாடு என்ற சனாதன மன நிலையை உடைத்து நொறுக்கப்பட வேண்டும். மாணவர் ஆசிரியரிடையே நன்மதிப்புறவு வேண்டும்.

எனவே கல்வியின் தரம் உயர்த்தல் என்ற பெயரில்-கல்வியை வெகுமக்களுக்கு மறுத்திடும் நோக்கத்தைக் கொண்டுள்ள தேசியக் கல்விக் கொள்கை வரைவு மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். மேலும் கல்வியாளர்களைக் கொண்ட குழுவால் உரு வாக்கப்படாத இவ்வரைவு அடிப்படையிலேயே பிழை யானது. இதனைக் கல்வியாளர்களையும், ஒட்டுமொத்த சமூகப் பற்றுடைய சமூகவியலாளர்கள், மானுடவிய லாளர்கள், உளவியலாளர்கள், மெய்யியலாளர்கள் எனப் பலரையும் உள்ளடக்கிய குழு ஒன்று அமைத்து அவர்களின் மேலான ஆய்வுக்குத் தேசியக் கல்விக் கொள்கை உட்படுத்தப்பட வேண்டும். அவர்களின் ஒருமித்த பரிந்துரைகளின் அடிப்படையில்தான் கல்விக் கொள்கை இறுதி செய்யப்பட வேண்டும்.

## அரியநாயகி அம்மாள் மறைவு



புதுச்சேரி தமிழ்மாமணி புலவர் இறைவிழியன் ஐயா வின் துணைவியார் நல்லா சிரியரும் சிறந்த அன்னையு மான அரியநாயகி அம்மாள் 19.12.2019 அன்று இயற்கை எய்தினார்.

பணிநிறைவு பெற்ற பின் னரும் ஓய்வறியாது, ஓய்ந் திருக்காது தனித்தமிழ்ப் பள்ளியான "பெரியவர் சாமிநாதன் நினைவுப் பள்ளி"யில் ஊதியம் எதுவும் பெறாமல் மாணவர்களின் படிப்பிற்காகத் தன்வாழ்நாளைச் செலவிட்டவர்.

**உயிர்நேயமும். மனத்துணிவும்,**
**நேர்மையும் பெற்றவர்.**
**ஈடுசெய்ய முடியாதது அவரிழப்பு**

## கீழடி நம் தாய்மடி!

மத்தியிலே தொல்லியலின் அறிஞர் நல்ல
மாண்புடைய அமர்நாத்து இராம்கி ருட்டிணன்
முத்தாய்ப்பாய் வைகைநதிக் கரையின் ஓரம்
முகப்புள்ள கீழடியில் ஆய்வு செய்து
இத்தரையில் தமிழினந்தான் மூத்தார் என்றும்
ஏற்றமிகு பண்பாட்டில் வாழ்ந்தார் என்றும்
முத்திரையைத் தான்பதித்தார் ஆத லாலே
மூத்தகுடி உலகத்தில் தமிழர் என்போம்!

கீழடியில் தான்தொடங்கி கடலின் ஈறாய்
கரையோரக் கிராமங்கள் ஆய்வு செய்து
கீழடியைத் தேர்ந்தெடுத்துத் தோண்டும் போது
கல்மணிகள் சுட்டசெங்கல் பானை ஓடு
அழகான உறைகிணறு ஈட்டி அம்பு
அங்குள்ள குளியலறை தாயக் கட்டை
கீழடியில் ஆயிரமாய் பொருள்கி டைக்க
காலத்தின் மூத்தகுடி தமிழர் என்போம்!

பழங்கால ஆலமரம் தேனூர் தன்னில்
புயல்மழையில் சாய்ந்துவிட வேரின் பக்கம்
குழந்தைகளின் விளையாட்டில் மண்ணில் ஆன
கலயந்தான் உடைந்துவிட தங்கக் காசு
புழக்கத்தில் வெளியில்வர அரசி டந்தான்
பொதுமக்கள் ஒப்படைத்தார்! மேலும் நல்ல
பழங்காலப் பொன்நகைகள் கிடைத்த தாலே
பண்பாட்டில் மூத்தகுடி தமிழர் என்போம்!

நதிஓரம் கிடைத்துள்ள தங்கக் காசில்
நற்றமிழில் கோதையெனும் பெயரைக் கண்டு
மதிப்பீடு செய்ததிலே தமிழர் பண்பு
மூவாயிரம் ஆண்டின் முன் இருக்கும் என்றார்
பதிந்துள்ள கருப்போடு சிவப்பு வண்ணம்
பானையதும் நெசவிரும்பு தொழில்க ளாலும்
அதிகளவு தமிழ் எழுத்துத் தெரிவ தாலும்
அறிவார்ந்த மூத்தகுடி தமிழர் என்போம்!

செல்வவளம் நகர்வணிகம் மதுரை என்றும்
சிலம்போடு பரிபாடல் மதுரைக் காஞ்சி
சொல்வளத்து இலக்கியங்கள் சொன்ன தற்கே
சான்றாகப் பலபொருள்கள் கிடைத்த தாங்கே!
தொல்லியலின் துறைமேலும் ஆய்வு செய்ய
தொன்மைபுகழ் கிராமங்கள் தேர்வு செய்து
உள்ளார்கள் என்கின்ற செய்தி யாலும்
உலகத்தில் மூத்தகுடி தமிழர் என்போம்!

- கவிஞர் **முத்தரசன்**
பெரம்பலூர்

# குடியுரிமைச் சட்டத்திருத்தம் 2019 ஏற்படுத்தும் எதிர்விளைவுகள்

குட்டுவன்

இந்தியா என்கிற வடிவம் எந்தக் காலத்திலும் இருந்ததே இல்லை. இசுலாமிய மதத்தைப் பின்பற்றிய பல இனக்குழுக்கள் இந்தியாவின் மீது படையெடுத்தனர். மொகலாயர் ஆட்சிக்காலம் பாபருக்குப் பின் உறுதி செய்யப்பட்டது. மொகலாயர் அவுரங்கசீப் வரை- இன்றைய ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் வங்க தேசம் இன்றைய இந்தியாவின் பல நிலப் பகுதிகளைக் கைப்பற்றி ஏறக்குறைய 350 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். நான்கு ஐரோப்பியக் குழுமங்கள் 18ஆம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் வணிகத்தை மேற்கொண்டனர். காரல் மார்க்சு இந்த வரலாற்று நிகழ்வுகளை மிக அழகாகச் சுட்டியுள்ளார். மொகலாயர்களின் பேரதிகாரம் மொகலாயப் போர்படைத் தளபதிகளால் உடைக்கப்பட்டது. மொகலாயப் படைத்தலைவர்களின் செல்வாக்கு மராட்டியர்களால் உடைக்கப்பட்டது. மராட்டியர்களின் அரசியலதிகாரம் ஆப்கான் நாட்டினரால் உடைக்கப் பட்டது. இவ்வாறு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நினைத்து எல்லோரும் ஒருவருக்கொருவர் போராடிக் கொண்டிருக்கும் போது இங்கிலாந்து இந்தியப் பகுதிக்குள் விரைந்தது. இவர்கள் அனைவரையும் அடக்கியது. இருந்தாலும் இந்திய நாடு இசுலாமியர் என்றும் இந்துக்கள் என்றும் பிளவுபடவில்லை. ஆனால் பல்வேறு சாதிகளுக்கு இடையில் பிளவுப்பட்டது (The paramount power of the Great Mogul was broken by the Mogul Viceroys. The power of the Viceroys was broken by the Maharattas. The power of the Maharattas was broken by the Afghans, and while were struggling against all, the Briton rushed in and was enabled to subdue them all. A country not only divided between Mohammedan and Hindu, but between tribe and tribe, between, caste and caste. *Karl Marx and Fredrick Engels – On the National and Colonial Questions – Selected Writings* – edited by Aijaz Ahmed, 2001,p.70 என்கிறார்.

1857இல் பிரிட்டிஷ் ஆட்சியை இங்கிலாந்து அரசு நேரடியான நிர்வாகத்தின் கீழ் இந்தியத் துணைக்கண்டத்தைக் கொண்டு வந்தது. அப்போது இன்றைய பாகிஸ்தான் வங்க தேசம் பர்மா இலங்கை ஆகிய பகுதிகளும் இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதிகளாக இருந்தன. 1888ஆம் ஆண்டிற்குள் பிரித்தானிய அரசு தனது நிர்வாகத் திறனால் இந்தியாவை உறுதியுடன் கட்டமைத்தது. இந்தக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்குத் துணை நின்றவர்களில் முதன்மையானவர் கவர்னர்-ஜெனரல் குழுவில் இருந்த ஜான் ஸ்டிராச் என்பவர். பணி ஓய்வு பெற்ற பிறகு அவர் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இந்தியாவைப் பற்றிய ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அவ்வுரையில் இந்தியாவில் இருந்த நாடுகளுக்கிடையேயான வேற்றுமையின் அளவு, ஐரோப்பிய நாடுகளுக்கு கிடையே இருந்த வேற்றுமையின் அளவைவிட அதிகமானதாகும். இந்தியாவில் இன மொழி மத வேறுபாடுகள் பெரிய அளவில் உள்ளது இவைகளுக்கு அரசியல் சமூக தனித்தன்மையான கூறுகள் இல்லை. இந்தியாவைப் பற்றி முதன்மையாக அறிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ஐரோப்பிய நாடுகளைப் போல இந்திய நாடுகள் ஒருவிதமான ஒற்றுமையோ அரசியல் சமூக மத புவி அமைப்புக் கூறுகளோ பெற்றிருக்கவில்லை. கடந்த காலங்களில் இந்தியா என்ற ஒரு நாடு இருந்தது இல்லை எதிர்காலத்திலும் அதற்கு வாய்ப்பில்லை. பொதுவாக பஞ்சாப் வங்காளம் சென்னை மாகாணம் மற்றும் வடமேற்கு மாகாணங்களில் இருப்பவர்கள் எப்பொழுதுமே ஒரு நாடு என்ற உணர்வினைப் பெற்றிருக்கவில்லை. இவ்வாறு காந்திக்குப் பிறகு இந்தியா என்ற நூலில் ராமச்சந்திர குகா ஸ்டிரேச்சின் மேற்கோள்களைக் காட்டி, அவரின் கருத்து ஒரு வரலாறு தந்த தீர்ப்பாக கருத வேண்டும் என்று கூறுகிறார் (Strachey's remarks were intended as a historical judgement).

இந்தியத் துணைக்கண்டம் பல நாடுகளின் கூட்டமைப்பாக இருந்து 1947க்குப் பிறகு பல தனி நாடுகளாகப் பிரிந்து, இன்று இந்தியா என்று அழைக்கப் படுகிறது. 7 திசம்பர் 2019 அன்று வெளி வந்த அரசியல் பொருளாதாரம் இதழில் தெவி என்ற ஆய்வாளர் இந்தியை இந்தியாவில் திணிக்கக்கூடாது என்ற ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் இன்றைய இந்திய ஆட்சியாளர்கள் கருதுவது போன்று இந்தி பேசுபவர்கள் இந்தியாவின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 4 பகுதிகளுக்கு ஒன்றாகத்தான் உள்ளார்கள் என்று குறிப்பிடுகிறார்.

**காரணம் இந்தியோடு பல்வேறு வேற்றுமைகளையும் தனித்தத் தன்மைகளையும் உடைய 53 துணை மொழிகளையும் இணைத்து 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்தி பேசுபவர்களின் எண்ணிக்கையை ஒன்றிய அரசு அதிகரித்துக் காட்டியுள்ளது என்று பல தரவுகளுடன் விளக்கியுள்ளார். இவரும் ஸ்டிரேச்சி கூறியது போன்று இந்தியா ஒரு நாடன்று என்று விளக்கியுள்ளார்.**

தமிழில் நாடு என்ற சொல் இடைக்காலத்தில் லத்தீன் மொழியில் இருந்து வந்தது. ஒரு நாட்டிற்கு இலக்கணம் ஒரு மொழி பேசுகிற மக்கள் இணைந்து வாழ்வதே நாடு என்று 19ஆம் நூற்றாண்டு வரை எல்லோரும் ஒப்புக் கொண்டனர் என்று கூறுகிறார். இந்திய ஆட்சிப் பணி உயர் அலுவலராக இருந்த ஜார்ஜ் கிரியர்சன் என்பவர் தலைமையில் 1898இல் அமைக்கப்பட்ட மொழிக் கணக்கெடுப்புக் குழு 1928வரை 30 ஆண்டுகள் மொழிக்கணக்கெடுப்பை நடத்தியது. 11 நூல்களாக பிரித்தானிய அரசு வெளியிட்டது. இந்தக் கணக்கெடுப் பின்படி இந்தியத் துணைக்கண்டத்தில் 189 மொழிகள் எழுத்து வடிவம் பெற்றதாகவும் மற்ற இதர மொழிகள் பேச்சு வழக்கில் இருந்ததாகவும் கூறப்பட்டது. இந்த அடிப்படைகளையும் மொழி, இன, பண்பாட்டு வேறு பாடுகளையும் அறிந்த காங்கிரசுக் கட்சி இதன் காரண மாகத்தான் 1927இல் காங்கிரசு மாநாட்டில் மொழிவழி மாநிலங்கள் அமைப்போம் என்று உறுதி கூறப்பட்டது.

**எனவே இன்றளவும் இந்து, இந்தி, இந்தியா என்று பேசுவது ஒரு பொய்யான கூற்றாகும். 1995ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நீதியரசர் ஜே.எஸ். வர்மா, நீதியரசர் என்.பி.சிங், நீதியரசர் வெங்கடசாமி ஆகியோர் அளித்தத் தீர்ப்பில் இந்து மதம் இந்துத்துவா போன்ற கருத்துருக் கள் குறுகிய மனப்பான்மையோடு உருவாக்கப் பட்டவை என இரண்டு அமர்வுத் தீர்ப்புகளில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.** இந்த உண்மை களை எல்லாம் மறைத்துவிட்டு உயர் சாதி வெறியோடு 1923ஆம் ஆண்டில் இந்து மகா சபையின் தலைவராக இருந்து சாவர்க்கர் இந்துத்துவா: யார், இந்து? (Hindutva: Who is Hindu?) என்ற நூலை எழுதினார். இதைத்தான் கொள்கையாக ஆர்.எஸ்.எஸ்., ஜனசங்கம் இன்றைய பாஜக இந்துத்துவா - இந்து ராட்டிரம் என்று அழைக்கிறார்கள். இந்த வழக்கு சிவசேனாவின் தலை வராக இருந்த பால் தாக்கரேக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்காகும். அன்றைக்கு மராட்டிய மாநிலத்தில் இந்து நாடு அமைப்போம் என்று கூறிய சிவசேனா, இன்று இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நாடாளுமன்ற மேலவையில் வந்த போது பின்வாங்கியது. மேலும் டிசம்பர் 20 2019இல் மும்பையில் அறிஞர்கள், கலை ஞர்கள், திரைத்துறையினர் பல ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டத் திருத்தத் திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பாதுகாப்பையும் அனுமதியையும் வழங்கியுள்ளார், இன்றைய சிவசேனா முதல்வர் உத்தவ் தாக்கரே.

இந்தியாவின் உள்நாட்டு ஒட்டு மொத்த உற்பத்தி யின் ஆண்டு வளர்ச்சி 3 விழுக்காட்டிற்குக் கீழ் வீழ்ந்து வருகிறது. வேளாண் தொழில் கட்டமைப்புத் துறைகள் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன. பணித் துறையில்தான் பெரிய அளவிற்குச் சரிவுகள் ஏற்பட வில்லை. இதற்குக் காரணம் மென் பொருள் உற்பத்தியில் இந்தியாவின் பல மாநிலங்கள் முன்னிலை வகிக் கின்றன. ஏற்றுமதியும் செய்கின்றன. இந்தியாவின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ள எரிசக்திப் பொருள்கள் இசுலாமிய நாடுகளான ஈரான் ஈராக் சவுதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளில் இருந்துதான் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது இந்தியாவின் ஒட்டு மொத்த எரிபொருள் தேவை அளவில் 80 விழுக்காடாகும். வளைகுடா நாடுகளில் பல இலட்சக்கணக்கான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாகத் தென்னக மாநிலங்களில் இருந்துதான் அதிகமானோர் அங்குப் பணிபுரிகின்றனர். கேரள மாநிலத்திற்கே அதிக அளவு பணவிடைத் தாள்கள் வழியாக அதிக அளவிற்குப் பணத்தொகை வருகிறது. எனவேதான் ஆளுங்கட்சியான மார்க்சிஸ்ட் கூட்டணியும் எதிர்க்கட்சியான காங்கிரசுக் கூட்டணியும் இணைந்தே இந்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டங் களை நடத்தி வருகின்றனர்.

உலக வங்கி இந்தியாவில் இருந்து அயல்நாடு களுக்குச் சென்று பணிபுரிபவர்களும் அந்நாடுகளில் குடியுரிமைப் பெற்றவர்களும் இந்தியாவிற்கு அனுப்பும் பணத்தொகையைக் கணக்கிட்டு 2018இல் வெளியிட் டுள்ளது. அப்புள்ளிவிவரப்படி மேற்குறிப்பிட்டவர்கள் அனுப்புகிற தொகை 2018ஆம் ஆண்டில் மட்டும் ரூபாய் 5 இலட்சத்து 53 ஆயிரம் கோடி ஆகும். இந்தியாவிற்கு அடுத்த நிலையில் சீனா மெக்சிகோ பிலிப்பைன்ஸ் எகிப்து போன்ற நாடுகள் உள்ளன. இந்தியாவில் இருந்து குடி பெயர்ந்து அயல்நாடுகளில் குடியுரிமை பெற்றவர்களும் பெறாதவர்களும் அனுப்புகிற தொகையைக் குறைத்தாலே, இந்தியப் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்து உள்நாட்டு உற்பத்தியில் ஒரு விழுக்காட்டிற்குக் கீழ்ச் சென்றுவிடும் என்பதை தில்லியில் ஆட்சி புரியும் இந்து ஏகாதிபத்தியவாதிகள் உணராமலும், பின்விளைவுகள் எதிர்விளைவுகளைச் பற்றிக் கவலைப்படாமலும் அறிவு வறட்சியோடு செயல் படுகின்றனர்.

மேலும் இந்தியா 1948இல் ஐக்கிய நாடுகள் மன்றம் வெளியிட்ட மனித உரிமைப் பிரகடனத்தில் கையெழுத் திட்டுள்ளது. இந்தச் சட்டம் மனித உரிமைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தன்மைகளுக்கு எதிராகவும் அமைந்துள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் செயலாகவும் இந்தச் சட்டத்தின் விளைவுகள் அமைகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குடிமக்களின் முதன் மையான உரிமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. சம உரிமை, சுதந்தரம், ஒன்று கூடுகிற உரிமை பேச்சுரிமை, கருத் துரிமை அமைப்புகளை உருவாக்கும் உரிமை ஓரிடத் திலிருந்து மற்றொரு இடத்திற்குக் குடி பெயர்ந்து வாழும்

உரிமைகளை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 14 முதல் 31 வரை மக்களுக்கு வழங்கு கின்றன. மேற்குறிப்பிட்ட மனித உரிமைகளை, அரசோ தனி நபரோ பறிக்க முற்பட்டால் அரசமைப்புச் சட்டத்தின் 32 மற்றும் 35 பிரிவுகள் மக்கள் தங்கள் உரிமை களைச் சட்டத்தின் வழியாகப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமைகளையும் வழங்குகின்றன.

எனவே ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்சாவும், பிரதமர் மோடியும் இந்து திருவிளை யாடல்களை இச்சட்டத்தின் வழியாகத் தொடங்கி, நாட்டில் பெரும் குழப்பத்தையும் அமைதியின்மை யையும் உருவாக்கியுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கும் இலங்கையில் தேயிலைத் தோட்டங்களுக்கு பிரித்தானிய ஆட்சிக்காலத் தில் பணியாளர்களாகச் சென்று இன்றளவும் குடியுரிமை பெறாத தமிழர்களைப் பற்றியும், அமித்சா அறியா மையில் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகச் சென்றவர்கள் தொடர்பாக இலங்கையின் டட்லி சேனநாயகாவும் பிரதமர் நேருவும் செய்து கொண்ட ஒப்பந்தம், ஸ்ரீமதி சீறிமாவோ பண்டார நாயக மற்றும் பிரதமர் சாஸ்திரி செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி தமிழ்நாட்டிற்கு மீண்டும் திரும்பி குடியுரிமை பெற்றவர்களைப் பற்றி அமித்சா கூறியது கண்டனத்திற்குரியதாகும்.

இச்சட்டத்தில் அரசியல் காரணமாக ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா திரும்பிய இந்துக்கள் கிறித்தவர்கள் சீக்கியர்கள் பார்சிகள் பௌத்தர்கள் சமணர்கள் ஆகியோர்களுக்கு மட்டும் இச்சட்டத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இச்சட்டம் பாதுகாப்பை வழங்கவில்லை. பாசகவின் அடிமை அரசாகச் செயல்படும் தமிழக முதல்வர் இதுபற்றி உள்துறை அமைச்சரிடம் நேரடியாக விளக்கியுள்ள தாகக் கூறுவது தமிழர்களை ஏமாற்றும் அரசியல் மோசடியேயாகும்.

**மேலும் உலகமயமாதல் கொள்கையை ஏற்றுக் கொண்டு பல இலட்சம் கோடி அளவிற்குப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் உள்நாட்டு குசராத்தி முதலாளிகளுக்கும் வரிச் சலுகைகளை அளித்து வரும் இரு குசராத்திகளால் ஆளப்படும் ஒன்றிய அரசு, தமிழர்களை மட்டுமல்ல இந்தி யாவில் வாழும் இசுலாமியர் உட்பட பல்வேறு தேசிய இனங்களைக் கொச்சைப்படுத்தும் வகை யிலேயே இச்சட்டத்தை இயற்றியுள்ளனர். இது இந்து நாடா? குஜராத்தி முதலாளிகளின் கைப் பாவைகள் ஆளும் ஆட்சியா? இதற்கு ஒரு நாடு என்ற ஒரு இலக்கணம் தேவையா? என்ற பல் வேறு வினாக்களுக்குப் பதில் கூற வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.**

# அரசியல் இதுவோ?

ஆட்சிக்கு எதிராகத் துரும்பைக் கிள்ளி
அசையுங் காற்றில் எறியினும் அச்செய்கை
காட்சிக்குத் தூணிலடித்தாற் போல் தோற்றிக்
கடுந்தண்டனைச் சட்டம் சீறிப்பாயும்
மாட்சியுற மன்னர்க்கு இடித்துரைப்பார்
மருங்கிருக்க வேண்டுமென்பார் வள்ளுவர்தாம்
மீட்சியுறுங் கருத்துரைக்க முடியா ஆட்சி
மிடிமைக்கு விழவுகாண முடியாதோ சொல்.

கறைமுகத்தைத் தாழிட்டு நம் கண்முன்பு
களிமுகத்தில் ஒளிபூக்கும் அரசினர்கள்
“நிறைமுகத்தின் ஆட்சி நடத்துகின்றோம்” என்பார்.
நிழல்முகத்தை இருள் திரையில் காட்டும் சூரர்.
முறைமுகத்தின் கண்விழிக்கு ‘இமை, யாமெ’ன்று
முளைமுகத்தில் முழுமரத்தைக் காட்டும் வீரர்.
துறைமுகத்தில் மட்டுமின்றிக் கப்பல் தன்னை
நுரைமுகத்தில் நிறுத்துகின்ற கெட்டிக்காரர்.

முரசடிக்கும் பணநாயக ஆட்சிதன்னில்
‘முறைவாசல்’ செய்வாரே வாழ்வார்; நேர்மை
விரல் சுட்டின் தன்தலையை இழந்து சாகும்.
வெறுமையிலே பசுமைகளின் மயக்கத் தோற்றம்.
அரசியலமைப்புச் சட்டம் தந்துள்ள
அனைவர்தம் அடிப்படையாம் உரிமை இன்று
கரவியலாய்த் தூக்கிலிடப் படுங் கேட்டுக்குக்
கருத்துரைத்தால் நாவோடு ஆவி போகும்.

எழுந்ததடா மராட்டியத்தில் புயலின் வீச்சு
எறிந்ததடா இறுமாப்பின் காலைத் தூக்கி!
விழுந்ததடா சாணக்கிய மூளைச்சாவு
விழுந்ததடா புரட்சிஉளி இருள்செ துக்கி
பொழிந்ததடா புதுமழையே காய்ந்த நெஞ்சில்
பொலிந்ததடா மணங்கமழும் நெருப்புப் பூக்கள்
கிழிந்ததடா அதிகாரப் பணச்செருக்கு
கிளைத்ததடா நம்பிக்கைப் புதுவெளிச்சம்.

வன்புணர்வும் பெண்ணெரிப்பும் வெறியின் செய்தி
வாசிப்பா? அருவருப்பின் ஆர்ப்பரிப்பா?
பெண்மலர்மேல் வண்டுகளின் அமிலவீச்சா?
பெருங்காவல் அறமன்றம் ‘நத்தைத்’ தீர்ப்பா?
வெங்கூட்டுப் புணர்ச்சி விகார நாட்குறிப்பா?
மெல்லினங்கள் வல்லினத்துப் பசித்தீச்சோறா?
பொன்மயில்கள் சாம்போது ஊளைக் கூச்சல்
பொறுமையாக விழிக்கட்டும் சோம்பல் நீதி.

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# சுயமரியாதை (தன்மானம்)

இரா. பச்சமலை

பெரியார் தம் வாழ்நாள் காலமெல்லாம், மக்கள் மானமும் அறிவும் பெற்ற மக்களாக மாற்றப்பட வேண்டுமென்ற முதன்மையான குறிக்கோளை முன்னிறுத்தி, பரந்துபட்ட நெடும் தொடர் பரப்புரையை மேற்கொண்டு அந்தக் குறிக்கோளை அடைவதற்கான செயல் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்திட ஆவனவெல்லாம் செய்தார். மேலும் "மானம் தான் மனிதனுக்கு அழகு" என்று வலியுறுத்தினார். மான உணர்வு உடைய ஒருவர்தான் மனிதன் என்ற இலக்கண வரையறைக்குள் வரும் தகுதி பெறுகிறார் என்றார். மான உணர்வு பெற்றிட அடிப்படையில் மக்களுக்கு வாழ்க்கை, பிழைப்பு அல்ல உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை நிறைவேற்றும் வகையில் மக்கள் எல்லோருக்கும், குறிப்பாக மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் சமூக மதிப்பு, கல்வி, பொருளாதாரம், மருத்துவம் மறுக்கப்பட்டவர்களாக ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள் அரசுக் கல்வியில், பணிகளில் பங்குபெற்றிடும் உரிமை உடையவர்கள் என்பதை வலியுறுத்தி, அரசுகளைக் குறிப்பாகத் தமிழகத்தில் 1921-லிருந்து சமூக நீதிக் கோட்பாட்டின் முதன்மைக் கூறான இடப்பங்கீட்டைப் பெற்றிட வழிகண்டார்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளைக் கடக்கின்ற இந்த 2020-ஆம் ஆண்டில் என்ன நிலை நிலவுகின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரியார் காண விழைந்த சமூக விடுதலையுடன் கூடிய தன்மானத்துடன் வெகுமக்கள் அனைவரும் வாழ்ந்துவர வழிகண்டோமா என்ற வினாதான் நம் முன் நிற்கிறது. ஆனால் இப்பொருள் குறித்து விரிவான ஆய்வுக் கண்ணோட்டத்தில், தன்மான உணர்வு அற்ற பிழைப்பு நிலையில் கொடும் இழிவான நிலையில் மக்கள் உழன்று வருவது குறித்து நெடிதும் பேசி வருகிறோம்; எழுதி வருகிறோம். அதே நேரத்தில் தீர்வை நோக்கி, அவ்வளவு எளிதில் இக்குறிக்கோளை அடைந்திட நெடும் பயணம் தேவை என்ற புரிதலுடன் தான் இருக்கிறோம். எனினும் தெளிவான, வரையறுக்கப்பட்ட கால அளவுகளுடன் கூடிய செயல் திட்டங்கள் வகுத்துச் செயல்பட வேண்டியவர் களாகவுள்ளோம். எனவே, கட்டுரையின் தொடக்கத்திலேயே என் புரிதலிலான தீர்வுகளை முன்வைத்து விட்டு, அவற்றின் விளக்கங்களைத் தொடர முற்படுகிறேன்.

தன்மானம் தழைக்க, தன்மான உணர்வு நிலைத்திட மிகவும் அடிப்படையாக ஒவ்வொரு தனிமனிதனும் எதற்கும் எவரையும் சார்ந்து வாழாத தற்சார்பு வாழ்வையே கொண்டிருக்க வேண்டும். இக்கூற்று பொது நிலையில்-பொதுவெளியில் பொருத்தப்பாடு உடையது எனச் சொல்லிட முடியாது. அதே நேரத்தில் தற்சார்பு வாழ்வுக்கு தனிமனிதன் மதிப்புடைய ஊதியம் கொண்ட பணி, நற்கல்வி பெறத்தக்க வாழ்ப்பைத் தரும் சூழ் நிலையுடைய சமூகத்தின் அங்கமாக இருக்க வேண்டும். இந்தப் பின்னணியில் தீர்வுகளைக் கீழே காணலாம்.

அ. அடிமைத்தளை விலங்கிடும் இந்துச் சனாதன நால்வருணம் நொறுக்கப்படும் வகையில் "இந்துச் சட்டம்" தக்கவாறு திருத்தப்பட வேண்டும்.

ஆ. இதையே கோட்பாடாகக் கொண்டுள்ள 'கீதை' நூல் தடைசெய்யப்பட வேண்டும்.

இ. நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் வாழ்க்கைக் கேற்ற ஊதியம் கிடைக்கும் வகையிலான- குறைந்த அளவு ஊதியம் இவ்வளவு என உறுதிப்படுத்தும் பணியைப் பெறவேண்டும்.

(i) அடிப்படையில் உடலுழைப்பு, எழுத்துச் சார்ந்தவை போன்ற எம் பணியும் சமூகத்தின் நலத்திற்கும், மேம்பாட்டுக்குரியது என்ற தன்மையில் ஒரு மணிநேரத்திற்கு இவ்வளவு சம்பளம் என உறுதி செய்யப்பட வேண்டும்.

(ii) இதற்கான துணை நடவடிக்கையாக, தற்போதைய உயர் ஊதிய அளவு மொத்த மாதச் சம்பளம் ரூ.2.50-ரூ.3.00 இலக்கம் என நிலைப்படுத்தப்பட வேண்டும். காட்டாகக் குடியரசுத் தலைவர் சம்பளம், உச்ச வழக்குமன்றத் தலைமை நடுவர், ஒன்றிய அரசின் அமைச்சரவைச் செயலர் (Cabinet Secretary) மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் ஆகியோருக்கு நிலைநிறுத்தப்பட்ட சம்பளம் (Fixed Pay) என்றாக வேண்டும்.

(iii) அடித்தட்டு சம்பள விகிதம் தொடர்ந்து நான்கு (அ) ஐந்து ஆண்டுக்கொருமுறை உயர்த்தப்பட்டு 100க்கு மேற்பட்ட சம்பள விகிதங்கள் ஒழிக்கப்பட்டு, அதிக அளவாக பத்துச் சம்பள விகிதங்களாக மட்டும் ஆக்கப்பட்டு பின் ஐந்தாக ஆகவேண்டும்.

(iv) ஏவல் பணி (Meanial), கீழ்ப்பணி (Subordinate) விதிகள் என்பவை ஒழிக்கப்பட்டு 1-ஆம் நிலைப் பணிகள், 2-ஆம் நிலைப் பணிகள், 3-ஆம் நிலைப் பணிகள் என்று மாற்றியமைக்கப்பட வேண்டும்.

(v) சம்பள விகிதங்கள் தொடர்ச்சியாக உயர்த்தப் பட்டு 10 அல்லது 5 சம்பள விகிதங்கள் மட்டுமே என்று மாற்றியமைக்கப்படுவதற்கேற்ப அந்தச் சம்பள விகிதங்களைக் கொண்ட பணியாளர்களின் பணிகள் அதிகரிக்கப்பட வேண்டும். காட்டாக, அலு

வலக உதவியாளர்களின் தற்போதையப் பணி களுடன் பதிவேடுகள், கோப்புகளைப் பராமரித்தல், பதிவேடுகளில் பதிவுகள் செய்தல், எளிமையான கோப்புகளைக் கையாளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் அலுவலக உதவியாளர் பதவிப் பெயர் அகன்றுவிடும். இதே போன்று பிற இடைநிலைப் பதவிகளின் பணிகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

(vi) குறிப்பாகச் சம்பள வகைகள் 100-க்கு மேற்பட்ட வையாக உள்ள இழிநிலையுடன், அரசுப் பணி யிலிருப்போருக்கு நாட்டில் ஏற்படும் விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்ட அரசுகள் அகவிலைப்படி என் பதை அளித்து வருகின்றன. கொடுமை என்ன வென்றால், ஒவ்வொரு பணியாளரும் அவரவர் பெற்றுவரும் அடிப்படை ஊதியத்தில் அகவிலைப் படி வழங்கப்பட்ட விழுக்காடு அளவைப் பெறுவர். அதாவது உயர் ஊதியம் பெறுவோர் உயர் அக விலைப்படி குறைவான ஊதியம் பெறுவோர் அதற்கேற்றாற் போல் குறைவான அகவிலைப்படி. காட்டாக அகவிலைப்படி 5 விழுக்காடெனில் ரூ.1,00,000 அடிப்படை ஊதியம் பெறுபவர்கள் ரூ.5000 அகவிலைப்படியாகப் பெறுவர். ஆனால் ரூ.10000 அடிப்படை ஊதியம் எனில் அகவிலைப் படி ரூ.500 மட்டுமே. பொருள்களின் விலையேற்றம் அனைவருக்கும் பொதுவானது. அப்படியெனில் இதை அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு தரப்படுவது, உயர்சம்பளக்காரன்தான் அதிகம் பயன்படுவான். ஆனால் உண்மையில் குறைந்த அடிப்படைச் சம்பளம் பெறுபவர்கள்தான் விலையேற்றத்தால் பாதிப்புக்கு உள்ளாவர். எனவே அகவிலைப்படி அளவை அடிப்படைச் சம்பளத்தில் விழுக்காடு என்ற அடிப்படையில் இன்றி மூன்று அல்லது நான்கு வகையாகப் பிரித்து உயர் அளவை குறைவான அடிப்படை ஊதியம் பெறு பவருக்கும் குறைந்த அளவை உயர் ஊதியம் பெறுபவருக்கும், என வழங்குவதுதான் நியதி யாகும். எனவே விலையேற்றத்தால் அதற்கு ஈடாக விழுக்காட்டில் அகவிலைப்படி தரப்படுவது கைவிடப்பட வேண்டும்.

இங்கு தனியார் நிறுவனங்கள், அதில் பணிநிலை, ஊதிய நிலை போன்றவை ஆய்வுக்கு எடுத்துக் கொள் ளப்படவில்லை.

(vii) மேலே அமைப்புசார் துறைப் பணிகள், அவற் றின் ஊதியங்கள் பற்றிப் பேசப்பட்டன. அதே போன்று அமைப்புசாரா துறைகளான வேளாண்மை, நெசவுத் தொழில், உடலுழைப்புச் சார்ந்த பிற பணிகளுக் கான ஊதியங்களும் முறைப்படுத்தப்பட வேண்டும். முதன்மையாக உழவுத் தொழில்சார் பல்வேறு பணிகளுக்கும் மணிக்கு இவ்வளவு ஊதியம் என்று அளிக்கப்பட வேண்டும். இதையொட்டி நெசவுத் தொழிலாளர்களின் பல்வேறு பணிகளுக்கும் மணிக்கு இவ்வளவு ஊதியம் என்று அளிக்கப்பட வேண்டும். உடலுழைப்புச் சார்ந்த கட்டடம் கட்டும் பணிகள், சாலை அமைத்தல், இன்னும் பல்வேறு வகைப் பட்ட தொழில் சார்ந்த பணிகள் அனைத்தும்- மணிக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் மிகவும் அவலமான நிலை! இப்போது கூட குறைந்த அளவு சம்பளம் (Minimum Wage) எவ்வளவு என்பதுகூட இந்திய ஒன்றிய அரசால் இறுதி செய்யப்படாமல் உள்ளது. ஆனால் தொழிலாளர் நலத்துறை குறைந்த அளவு நாள் ஊதியம் ரூ.400-450 என்ற அளவில் இருக்க வேண்டும் என்று சொல்லி வருகின்றது. நாட்டிலேயே கேரள மாநிலம் மட்டும்தான் நாள் ஊதியம் ரூ.600 வழங்கி வருகின்றது. ஆனால் தமிழ்நாட்டில் இன்னும் மாவட்ட ஆட்சியர்கள் அலுவல கங்களில் ஏன் தலைமைச் செயலகத்தில் கூட, நாள் சம்பளம் வெறும் ரூ.100/-ம் அதற்குக் குறைவாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. வளர்ந்த மாநிலம் என வகைப்படுத்தப்பட்ட மாநிலமெனக் கருதப்படும் தமிழ் நாட்டு நிலையே இதுவெனில், வளர்ச்சியறியா வடமாநிலங் களான பீகார், உ.பி., ம.பி. போன்ற மாநிலங்களின் சம்பள அளவு எவ்வளவு கடைநிலையிலிருக்குமென எண்ணிக் கொள்ளலாம்.

ஈ) (i) கல்வியின் நோக்கமே மனிதன் தன்மான உணர் வுடன் வாழத்தான். அதனால் அரசு மட்டுமே மக்களனைவருக்கும் கல்வியை அனைத்து நிலை களிலும் வழங்கிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது நாடாளுமன்ற சனநாயக அரசின் முதன்மை யான கொள்கைக் கோட்பாடு என்பது உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த அடிப்படைக் கல்விக் கோட்பாட்டைச் சிதைக்கும் நோக்கம் கொண்ட தேசியக் கல்விக் கொள்கை கைவிடப்பட வேண்டும். மேலும் கல்வி, தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டுக், கொள்ளைக் கொள்கலனாக வடிவெடுத்துவிட்டது. இது அடிப்படைக் கல்வி பெறுவதையே மறுப்பது போலாகும் என்பதுடன், தனியாரிடம் கல்வியை உரிமையாகக் கோரிப் பெறமுடியாது. மேலும் கல்வியில் தனியார் முதலீடு எனில் அது இலாபம் ஈட்டும் தொழிலாக மாறும். அங்கு பணிபுரிவோர் அடிமை ஊழியத்திற்குத்தான் அணிய மாவர். எனில் அவர்களிலும் பயிலும் மாணவர்கள் நிலை பெரிதும் அவலம். கல்விக் கூடத்தில் மாண வர்கள் சேர்க்கப்படுவதிலிருந்து அங்குப் பணிபுரிபவர் கள் வரை அடிமைத்தளைக்கு உள்ளானவர்கள் ஆவர்.

எனவே இவர்கள் அனைவரும் தன்மான உணர்வே அற்றவர்களாகத்தான் இருக்கமுடியும். எனவே பள்ளிக் கல்வி வரையிலாவது, அரசு மட்டுமே கல்வி அளிக்க வேண்டும். அரசு மட்டுமே, தனியாரால் முடியாத இலவயக் கல்வி அளிக்க முடியும், ஆகையால் தன்மான உணர்வு மாணவத் தளிர் மனதிலேயே, விதைக்கப்பட பள்ளிக் கல்வியை அரசு மட்டுமே வழங்கிடல் வேண்டும். அதுவும் இலவயமாக வழங்கிட வேண்டியது அரசின் தலையாய பொறுப்புடனான கடமை.

(ii) கல்வியை அளிப்பது என்பது தாய்மொழியின் வழி யாக இயலும். வேற்று மொழியில் அளிக்கப்படின், அது கல்வியாக இராது; வெறும் படிப்பு என்றாகி விடும். கல்விதான் சமூக நெறிகளுடனான வாழ்க் கைக்கானது. படிப்பு எப்படியோ பிழைப்புக்கானது. எனவே தாய்மொழித் தமிழ் வழிக் கல்வி மட்டுமே - அரசால் மட்டுமே இலவயமாக வழங்கப்பட வேண்டும். பள்ளிக்கல்வி வரையிலாவது அரசின் பொறுப் பாகும்.

(iii) படிப்பு கல்வி என்ற பெயரில் மாநிலக் கல்விப் பாடத்தில், மய்ய அரசு பாடத் திட்டம், எனப் பல் வகைப்பட்ட பாடத் திட்டத்தில் அளிக்கப்படுவது இன்னும் குறிப்பாக ஒரே கல்விக் கூட வளாகத்தில் என்பது வளமானவருக்கு உயர்ந்த படிப்பு வறிய வர்க்கு தரமற்ற படிப்பு என்ற தன்மையில் அமைந் துள்ளது. பள்ளிக் கல்வி வரையிலாவது ஒரு மாநிலம் ஒரே கல்விப் பாடத் திட்டத்தின்கீழ்க் பொதுக் கல்வி யாக அரசு மட்டுமே வழங்கிட வேண்டும்.

உ) மக்களுக்கு மருத்துவம் அளிப்பது அரசின் தலை யாய சனநாயகக் கடமை. மேலும் எல்லா நிலை மருத்துவமும் மக்களனைவருக்கும் அரசு மட்டுமே வழங்க வேண்டும். அரசு வழங்கினால் மட்டுமே அதனை மக்கள் தம் உரிமையாகப் பெற்றிட முடியும். அதையே தனியார் வழங்கிடின் அது வெறும் இலாபம் ஈட்டும் ஒரு வணிகத் தொழிலாகத்தான் அமையும். சனநாயகச் சந்தைப் பொருளாதாரம் பின்பற்றப்படும் நாட்டில் தனியாரின் இலாபத்திற்கு எந்த அளவுகோலும் எவராலும் வகுத்திடவிய லாது. எனவே, மக்கள் மருத்துவம் பெறுவதற்கு முழுதும் சுரண்டப்படும் நிலைக்குத் தள்ளப்படுவர். எனவே வெகுமக்கள் தனியாரைச் சார்ந்துதான் மருத்துவம் பெறவேண்டின் உரிமை இழந்தவ ராவர்; இன்னும் முதன்மையாக உயிர் சார்ந்த மருத்துவத்தைப் பெறத் தன்மானத்தை இழக்கத் தான் நேரிடும்.

கட்டுரையின் தொடக்கத்திலேயே சொல்லப்பட்டுள்ள தீர்வுகளுள் முதல் இரண்டும் எந்த அடிப்படையில் முன்வைக்கப்பட்டது என்பதை விளக்கிட வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சமயத்தின் பேரால், கடவுளின் பேரால் பார்ப்பனிய இந்துத்துவச் சனாதனம் மக்களைப் பிறப்பின் அடிப்படையிலேயே மக்களை வஞ்சகமான நால்வருணங்களாகப் பிரித்து, வெகுமக்களைச் சூத்திரர்கள் எனச் சொல்லி அவர்கள் ஏனைய மூன்று வருணப் பிரிவினருக்கும் தொண்டூழியம் செய்து, கல்வி மறுக்கப்பட்டவர்களாக, பெரும்பாலோர் எப்பொருளுக்கும் உடைமையற்றவர்களாகப் பிழைத்திட மட்டும் வாழ்ந்திட அல்ல-என விதிக்கப்பட்டவர்கள் என ஒடுக்கி வைக்கப்பட்டு வந்துள்ளனர். இந்த இழிவைத் 'தர்மம்' என்று சொல்லியும் அது மீறப்படின் கொடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் மறுபிறப்பில் இன்னும் இழிபிறப்பாகப் பிறப்பர் என்னும் நரகத்திற்குள் தள்ளப்படுவர் என்றும் இந்த வெகுமக்கள் மனதில் பதிய வைத்ததின் விளைவால் அவர்கள் தாங்கள் இழிவானவர்களாக இருப்பதே மகிழ்ச்சிக்குரியதென என்னும் அவலநிலை உள்ளது. எனவே தன்மானத் திற்கு அடிப்படைத் தேவையான கல்வி, பொருள், உரிமை, உணர்வு மறுக்கப்பட்ட நிலையில் இவ்வெகு மக்களுக்குத் தன்மான உணர்வை ஊட்டிட, பிற்காலத் தில் முற்பட்டவர்தான் பெரியார். அவர் காலத்திலும், அடுத்தும் அவரின் அயராத அரும்பணியாலும் உழைப் பாலும் தன்மான உணர்வு பெற்றோராய் வளர்ந்துள் ளோம் என்பது உண்மைதான்.

ஆனால் அண்மைக்காலத்தில் பார்ப்பனியம் தலை தூக்கியதை அடுத்து, சனாதனம் அவரவர் விருப்பிற் கேற்பப் பின்பற்றப்படுவதில் தவறென்ன எனப் பரவலாகக் காட்சி ஊடகங்களிலும், பொதுவெளியிலும், அச்சு ஊடகங் களிலும் பேசு பொருளாக இன்னும் குறிப்பாகப் பெண்கள் சூத்திரரனைய இழிமக்கள் என இந்து மதமும், கீதையும் சொல்வதைச் சுரணையின்றிப் புறந்தள்ளிவிட்டுப் பெண்கள் கட்டுரை வடிப்பதுமான இக்காலக்கட்டத்தில் இவ்விரண்டும் ஒழிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளதைத் தன்மானமுள்ள எவரும் உணர்வர். தன்மானமற்ற தன்மையில் சனாதன விரும்பிகளாகத் தங்களைச் சொல்பவர்களைப் பார்த்துச் சொல்வது போல் இருக்கிறது குத்தூசி குருசாமியின் 10.2.1953 அன்றைய கட்டுரையில் உள்ள கீழேயுள்ள அவரின் நகைச்சுவை கலந்த கூற்று,

> "யார் நன்மைக்காக ஒன்றை எழுதுகிறோமோ,
> அவர்களே நம்மீது சண்டைக்கு வருகிறார்கள்!
> என் தலையில் தீ வைத்துக் கொண்டால்
> இவனுக்கென்ன? இவனா தீப்பெட்டி வாங்கித்
> தந்தான்? என்று கூடக் கேட்கிறார்கள்."

தன்மானம் என்பது உலகம் முழுவதற்குமான பொதுமைத் தன்மை கொண்டது. எனினும் தனிமனிதத் தன்மானம், இனம்சார் தன்மானம் (இன மானம்),

நாட்டிற்கான தன்மானம் (நாட்டு மானம்) என்பவையும் கருத்தில் கொள்ளத்தக்கவை. அடிப்படையில் வேலை தரப்படாமல், மதிப்புடை ஊதியத்துடனான பணி அளிக்கப்படாமல், நற்கல்வி வழங்கப்படாமல் மற்றும் பசிப்பிணியில் வைக்கப்பட்டுள்ள மக்களுள் எவருக்குத் தன்மான உணர்வு முகிழ்க்கும்? இப்படிப்பட்ட நிலையில்தான் உலக நாடுகளுடன் 117 நாடுகளில் நிலவும் பசிப்பிணி அளவை ஒப்பிடுகையில், இந்திய ஒன்றியம் 102-ஆம் இடத்தில் உள்ளது. அதாவது ஏறத்தாழ 17.5-20.0 கோடி மக்களைப் பசிப்பிணியில் வாட விட்டுவிட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளது ஒன்றிய அரசு.

ஆனால் இந்த அரசு செல்வந்தர்களையும், பெருந் தொழில் நிறுவனங்களையும் மதிப்புடன் நடத்தப் படுவதுடன் அவர்கள் பெற்றுவரும் ரூ.1000 கோடி கணக்கிலான இலாப அளவு குறைந்துவிடக் கூடாது என்பதற்காக காலம் காலமாக வெகுமக்களிடமிருந்து பறிக்கப்பட்ட வரிப்பணம் ஆர்.பி.அய்.இல் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததில் ரூ.176 இலக்கம் கோடியை, சில நூறு பெரு நிறுவனங்களுக்குக் கொட்டிக் கொடுத்து விட்டது. மேலும் அவர்களுக்கு ரூ.1.45 இலக்கம் கோடி வரிச் சலுகை அளித்துள்ளது இந்த அரசு. ஆனால் வெகுமக்களின் குறிப்பாக உழவு, நெசவு தொழில்சார் உடலுழைப்பு மக்களான 70-80 கோடி மக்களின் நலன்பேண-அவர்களின் விளை உற்பத்திப் பொருள்களுக்கு மதிப்புடைய விலைதர சில ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கிட இவ்வரசு தயக்கம் காட்டுகிறது. இதன் விளைவால்தான் இத்தொழில்கள் சார்ந்த மக்கள்தான், பெரும் அளவில் பசிப்பிணியில் வாழுவோராய் உள்ளனர். இவர்கள் எப்படி நற்கல்வி பெறமுடியும்? இந்நிலையில் உள்ள இவர்கள் தங்கள் உயிர் காப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்க வைத்து, தன்மானம் உள்ளவர்களாக வாழவேண்டுமென்ற எண்ணம் எழாதவர்களாக வைத்துள்ளது இந்த வன்கொடுமை இந்திய ஒன்றிய அரசு.

இந்திய ஒன்றியத்தில் வேலையின்மை, கல்வியின்மை என்ற நிலையில் வைக்கப்பட்டுள்ள மக்களாக உள்ளவர்களில் பெண்களின் நிலைமை- குறிப்பாக அவர்களுக்கான மருத்துவம் அளிக்கப்படுவது மிகவும் அவலமாக உள்ளது என்பதை 153 நாடுகளில் நிகழ்த்திய ஆய்வு சுட்டுகிறது. பொருளாதாரத்தில் பங்கேற்பு மற்றும் அதற்கான வாய்ப்புப் பெறும் அளவீட்டில் இந்திய ஒன்றியம் 149-ஆம் இடத்தில்தான் உள்ளது. பெண்கள் மருத்துவம் பெறுவதில் 150-ஆம் இடத்தில் எனத் தாழ்நிலையில் உள்ளது. பாலின சமநிலை அளவில் 112-ஆம் இடம்; கல்வி பெறுவதில் 112-ஆம் இடத்தில் உள்ளது இந்திய ஒன்றியம். இதிலிருந்து பொது நிலையில் மக்களின் தன்மான உணர்வு தாழ்ந்த நிலையில் உள்ளதைக் காட்டிலும் பெண்களின் தன்மதிப்புச் சிந்தனை மிகவும் அவல நிலையில் தான் இருக்கின்றது.

தனிமனிதத் தளம் தாண்டி தமிழ் நாட்டின் தன்மானம் கொடுமையாகச் சிதைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் தமிழர்களின் வரிப்பணத்தால் நிறுவப்பட்ட 25 அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தமிழ்நாட்டரசே நிருவகித்து வந்த நிலையில், 2017-இல் 'நீட்' என்று ஒன்றியம் முழுமைக்குமாக ஒரு நுழைவுத் தேர்வை ஒன்றிய அரசின் தேசிய மருத்துவக் குழுவே நடத்தி-அவர்களே தெரிவு செய்து மேற்சொன்ன தமிழக அரசு மருத்துவக் கல்லூரி இடங்களை நிரப்பிக் கொள்கின்றனர். இதை எந்த விலை கொடுத்தேனும் தமிழகத்தின் தன்மானம் காக்கப்பட்டு 'நீட்'லிருந்து விலக்கும் பெற்றிருக்க வேண்டும்.

**இதேபோன்று ஆண்டு வருமானம் ரூ.8 இலக்கம் என்ற அளவில் உள்ள உயர்சாதியினரை நலிந்தோர் எனச் சொல்லி அவர்களுக்கென்று 10 விழுக்காடு அளவுக்கு பொதுப் பிரிவிலிருந்து தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு 2018-19-ஆம் கல்வி ஆண்டிலிருந்தே இந்திய ஒன்றியக் கல்வி மற்றும் வேலைகளில் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து விட்டது. இந்திய ஒன்றிய அரசு. இது சமூகநீதிக் கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரானது. இதற்கென இயற்றப்பட்ட சட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது; மோசடியானது. இவ்வாறெல்லாம் உண்மைநிலை இருக்க, தமிழ்நாடு ஒன்றியத்திற்கே ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு முன்னோடியானது/ முன் காட்டானது என்ற பெருமையைக் கொண்டிருக்கும் இச்சட்டத்தை எதிர்த்துப் பெரும் எதிர்வினை மேற் கொண்டு அதை முறியடித்திருக்க வேண்டும். ஆனால் நாட்டின் தன்மானம்-தடுமாற்றம் கண்டு இச்சட்டத்திற்குத் தமிழகம் அடி பணிந்தது வரலாற்றுத் தலைக்குனிவு.**

ஒவ்வொரு தனிமனிதனும் தன்மானத்துடன் வாழ உரிமை உடையவன் என்பதை அரசமைப்புச் சட்ட விதி 21 உறுதி செய்துள்ளது. அது கீழே 'சட்டப்படியான நிறுவப்பட்ட முறையினாலன்றி எந்த மனிதனின் வாழ்க்கை அல்லது அவரின் தனி உரிமை மறுக்கப்படக்கூடாது.' இந்த விதியை விளக்கும் வகையில் அதன் உள்ளடக்கத்தைப் பல காலக்கட்டங்களில் உச்ச வழக்குமன்றம் விவரித்துள்ளது. அதாவது விதியில் குறிப்பிட்டுள்ள வாழ்க்கை என்பது வெறும் பிழைப்பு இல்லை. மதிப்புடன் கூடிய-தன்மானத்துடனான வாழ்வைத்தான் விதி வலியுறுத்துகிறது. மேலும் வாழ்வு என்றாலே மதிப்புடைய, வாழ்வு என்பது என்றும் நலிவற்ற நல்ல மருத்துவ வசதியுடன் கூடிய உடல் நலத்துடனும், தேவையான அளவுக்குமான மதிப்புடைய ஊதியம் பெறுபவராக ஒருவர் இருக்க வேண்டும் என்றும் கருத்துரைக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி இவையெல்லாம் ஒரு மனிதன் பெற்றால்தான் அவன் தன்மதிப்புடன், தன்மானத்துடன் வாழ்பவராகக் கொள்

ளப்படும் என்றும் தெளிவுரை தந்துள்ளது உச்ச வழக் காடு மன்றம். இதையெல்லாம் இந்த இந்திய ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் கரிசனத்துடன் கருத்தில் கொண்டிருந்து திட்டங்கள் வகுத்து செயல்படுத்தியிருந் தால், மேல் பத்தியில் சொல்லப்பட்டுள்ள அவல நிலையில் உலக நாடுகளுள் கடை இழிநிலையில் நிற்க நேரிட்டி ருக்குமா? இதில் செம்பாதி மக்களை வறுமையிலும் பட்டினியிலும் வாட வதங்க விட்டுவிட்டு, ‘‘நாட்டை வல்லரசு ஆக்கிடுவோம்’’ என்பது வெறும் வெற்றுக் கூச்சல் என்பதன்றி வேறு என்ன?

இனி மரியாதை என்ற சமற்கிருதச் சொல்லைத் தமிழில் தனமானம் என்றுதான் பெரியார் சொல்லி வருகின்றார். இந்த வடமொழிச் சொல்லுக்குள், இருவருக் கிடையே உள்ள உறவு, உயர்வு தாழ்வைக் குறிப்ப தாகத்தான் உள்ளது. காட்டாகப் பார்ப்பானைப் பார்த்தால் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும்; செல்வந் தனை ஏழை கண்டால் அவன் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஆசிரியருக்கு மரியாதை செலுத்த வேண்டும். உயர் அலுவலர்களைப் பிற நிலையிலுள்ள வர் காணும் போது, வணக்கம் சொல்லி மரியாதை செலுத்த வேண்டும். பெரியோருக்கு, பெற்றோருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முதலில் இவர்களைப் பார்க்கும் போதெல் லாம் இவர்களுக்கெல்லாம் மரியாதை செலுத்தக்கூடத் தெரியவில்லையே, மரியாதையில்லாமல் நடந்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதில் இருவழியிலும் மரியாதை நிலவுகிறதா? இல்லவே இல்லை. மேலும் இதில் இருவருக்குமிடையே மரியாதை பெரும் இடைவெளியை ஏற்படுத்துகிறது. அந்த வகையில் உயர்வு தாழ்வு நிலை பொதிந்துள்ளது இச்சொல்லில் என்பது தெளிவாகின்றது. ஆனால் பிறருக்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதில் இருவரும் ஒருவருக்கொருவர் மதிப்பளிக்க வேண்டுமென்பது பொதிந்துள்ளது. எனவே காணும் எவருக்கும் அவரின் பெரியவர், சின்னவர், சிறுவர் என அகவை, பதவி, பொருளியல் நிலைகள் எதையும் முன்னிருத்திடாமல் மதிப்பளிக்க வேண்டும்; அதில் தவறக்கூடாது என்பது சரியே. அதே நேரத்தில் மற்றவருக்கு எதிர் மதிப்பும் இயல்பாகவே அளிக்கப்படும், கிடைக்கும். எனவே காணும் எவருக்கும் முதலில் மதிப்பளி பின், மதிப்பிடு. இதுதான் தன்மானம். எனவே மரியாதை தேவையில்லை.

தனிமனிதன் ஒவ்வொருவரின் தன்மான உணர்வு பெருகுவதற்கு முதலில் சொன்ன தீர்வுகள் செயல் பாட்டுக்கு வர அரசுக்குப் பெருமளவு நிதி ஆதாரம் வேண்டும். அதை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதற் கான வழிவகைகள் கீழே.

1. நாட்டின் மிகப்பெரும் செலவினமான பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்படும் ரூ.9 இலக்கம் - ரூ.10 இலக்கம் கோடி அளவிற்கு இருப்பதை, பாக்கிசுத் தான் உள்ளிட்ட அண்டை நாடுகளுடனான அயலு றவுக் கொள்கையை நல்லிணக்கத்துடன் மேற் கொண்டு, உடனடியாக பெருமளவு செலவைக் குறைத்திட வேண்டும்.

2. வெகுமக்களின் உழைப்பால் பெரும் செல்வத் தையும் சொத்துக்களையும் குவித்துள்ள பெரு நிறு வனங்கள் தனியார்களிடமிருந்து நேரடி வரி விழுக் காட்டை அதிகரித்து வரி வருவாயை மேலை வளர்ந்த அய்ரோப்பிய நாடுகளில் உள்ளது போல் பெருக்கி, மொத்த வரி வருவாயில் இதன் பங்கு 80-90 விழுக்காடு அளவுக்கு ஆக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் வெகுமக்களின் ஏழ்மை நிலை யைப் போக்கிடும் வகையில் அவர்கள் மேல் விதித்து ஈட்டப்படும் தற்போதைய மறைமுக வரி விழுக்காட்டை குறைத்து தற்போது மொத்த வரி வருவாயில் 60-70 விழுக்காடு வரை இருப்பதைக் குறைத்து 10-20 விழுக்காட்டு அளவுக்குக் கொண்டு வரவேண்டும்.

3. சொத்து வாங்குதல், மகிழுந்து வாங்குதல் போன்ற வற்றிற்கு பதிவுக் கட்டண விழுக்காடு ஒரே மாதிரி யாக இருப்பதை மாற்றி-அவற்றின் உயர்மதிப்பு, குறைவான மதிப்புக்கு ஏற்றவாறு முறையே உயர் அளவிலும் குறைந்த அளவிலும் விதிக்கப்பட வேண்டும்.

4. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் துய்த்தல் பொருள்களான உயர்மதிப்பு உடைகள்-மது வகைகள், நறுமணப் பொருள்கள் போன்றவற் றிற்கு விதிக்கப்படும் வரிகளைப் பல மடங்கு அதி கரிக்க வேண்டும். இன்ன பிற வழிகளில் (வெகு மக்களின் மீது வரிச் சுமையைக் குறைத்து) நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம்.

**தீர்வுகள் அதற்கான நிதிஆதாரங்களைப் பெருக்குவது என்பவையெல்லாம் கருத்தியலளவில் அடிப்படையாகப் புரிந்துகொண்டு, பெரும் வலி மையான போராட்டத்தின் மூலம் அரசுக்கு நெருக்கடி தந்துதான் செயல்படுத்த முடியும். முன்பாக இதற்கு இடதுசாரிக் கட்சிகள், அமைப்பு கள், ஒத்த கொள்கைகளைக் கொண்ட பிற கட்சிகள், அமைப்புகள் ஒருங்கே ஒன்றிணைந்து முன்னெடுத்து நடவடிக்கையுடன் கூடிய திட்டங் களை வகுத்திட வேண்டும்.**

## வேண்டுகோள்

**‘சிந்தனையாளன்’ இதழுக்குக் கட்டணம் கட்டி காலம் முடிவடைந்துள்ளோருக்கு இன்னும் இரண்டு திங்கள்கள் மட்டும் இதழ்கள் அனுப் பப்படும். தொடர்ந்து இதழ்கள் அனுப்பப்பட ஏதுவாக இதழுக்கான ஆண்டு / வாழ்நாள் / புரவலர் கட்டணத் தொகையை உடன் அனுப்பிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் குழு**

# சைவர்களின் மனப்பான்மை

- பெரியார் ஈ.வெ.ரா.

சைவர்கள் என்பவர் சிவனை முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபடுபவர்களாவார்கள். சிவ என்னும் சொல் மங்களகரம் என்றும் அன்பே உருவாகக் கொண்டது என்பது முதலாக பல பொருள்களையும் குறிக்கத்தக்க தாகும். இப்படிப் பொருள்படும் வாக்கியத்தின் வாச்சியனை வழிபடுபவர்கள்தான் சைவர்கள் என்று கூறுகிறார்கள். இத்தகையோர்களின் இலக்கணங்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதைக் குறித்து சைவாகமங்களில் விசேடமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவைகளை விரிக்கிற் பெருகுமென முக்கியமானவற்றை மட்டில் இங்கு குறிப்பிடுகிறோம்.

மன மொழி காயங்களால் தன்னைப் போற் பிறரை நேசித் தொழுகல் என்பன போன்றவைகளாகும். இத்தகைய அரிய குண சமூகத்தோடு கூடிய சைவப் பெரியார்களில் தானும் ஒருவராக எண்ணிக் கொண்டு அநேக சைவக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றி வரும் கோவை சேக்கிழார் நிலையம் தோழர் சி.கே. சுப்பிர மணிய முதலியார் ஆ.அ. அவர்கள் ஜனவரி மாதம் 18 "தமிழ்நாடு" பத்திரிகையில் "அரை குறை சாஸ்திர ஞானம் கூடாது" "சோதிட சாஸ்திர ஆராய்ச்சி" "நவக் கிரகங்களுடன் என்ன சம்பந்தம்" என்கின்ற தலைப்பு களின் கீழ் எழுதிய கட்டுரையின் துவக்கத்தில் "கிழிந்த பஞ்சாங்கத்தையும் தற்பைப் புல்லையும் நம்பாதே" என்று சொல்லுபவர் சுயமரியாதைக்காரர் என்றும், "சுயமரியாதைக் கொடியை ஏற்றியிருப்பவர்கள்கூட நல்ல நாளும் இராகு காலமும் பார்த்தே தீருகிறார்கள்" என்றும், அதை நான் பார்த்திருக்கிறேன் என்றும், மற்றும் பல விஷயங்களையும் எழுதி, கடைசியாக திருஞான சம்பந்த நாயனார் சரித்திரத்தைப் பற்றி சொல்லும் போது பெரிய புராணமானது "அருக்கன் முதற்கோள் அனைத்தும் அழகிய உச்சங்களிலே பெருக்க வலியுடன் நிற்கப் பேணிய நல் ஓரை எழத்திருக்கிளரும் ஆதிரை நாள்" அவர் அவதரித்த காலம் என்று சொல்லுகிறார். அதாவது "அவர் அவதரித்த காலத்திலே ஒன்பது கிரகங் களும் உச்சம், நல்ல லக்கினம், நக்ஷத்திரம் திருவாதிரை இப்படி ஒரு சாதகம் போட்டுப் பார்த்து சோதிடர்கள் பலன் சொல்லுவார்களேயானால் சுவாமிகள் சரித்திரத் திற்கு ஒத்தே இருக்கும்" என்றும் மேற்படி பத்திரிகை யில் காணப்படுகிறது. சோதிட சாஸ்திரமானது வான சாஸ்திர சம்பந்தமுடையது. இது கணிதத்தையே ஆதார மாகக் கொண்டது என்பது மறுக்கப்படத் தக்கதல்ல வென்றாலும் அது தற்போது மக்களிடம் புழங்கி வருகின்ற மாதிரியையும், அதனால் மக்கள் எத்தகைய துன்பத்திற்காளாகி ஏமாற்றமடைந்து துன்புற்று வரு கிறார்கள் என்பதையும் கவனிக்கும்போது, மக்களின் வாழ்க்கையில் அது தன்முயற்சிக்கும் தன் மதிப்புக்கும் தன் நம்பிக்கைக்கும் முற்றும் முரண்பட்டதாகவே காணப் படுவதுடன் அதை மக்களுக்குப் போதித்துப் பலன் களைச் சொல்லி ஏமாற்றி சாந்தி, கிரகப் பிழை என்ப வைகளால் ஒரு கூட்டத்தினர் காசு பறித்து நோகாமல் வயறு வளர்க்கப் போதிய சாதனங்களாகவிருக்கிறது என்கிற முறையில் அது மிகவும் கண்டிக்கத் தக்கதா கவே இருக்கிறது.

தற்கால விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் எந்த நவக்கிரகங்களின் பலா பலன்களைத் தெரிந்து அவற்றின் மூலமாக உலகுக்கு மிகவும் உபயோகப்படும் படியான சாதனங்களைக் கண்டு பிடித்து உலகுக்கு உதவினார்களென்று தோழர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் சொல்ல முற்படுவாராவென்று கேட்கின்றோம்.

தவிர, சுயமரியாதைக்காரர்கள் எந்த மகாநாட்டில் எந்தக் கொடியேற்று விழாவில் ராகுகாலம் நல்ல நாள் பார்த்து ஆற்றினார்களென்பதையாவது விளக்குவாரா? எந்தச் சோதிட சாஸ்திரம் தேவை என்கின்றாரோ அதே சாஸ்திரம் சொல்லி வந்த ரிஷிக் கூட்டங்களில் சேர்ந்த "மனோஜயந்து மாண்டவ்ய' என்ற ''மாண்டவ்யர்" என்பவரின் உறுதி மொழியை தோழர் சி.கே. சுப்பிர மணியம் அறியார் போலும். அதாவது நாள்கள் சமயங் களைப் பார்த்துச் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களைக் காட்டிலும் மனமானது திடப்பட்ட காலத்திலேயே செய்தல் நலமென்று சொல்லிய மாண்டவ்ய மகரிஷியின் வாக்கியங்களைக் கவனித்திருப்பாரேயானால், அவலை நினைத்து உரலை இடித்தற்கொப்பாக சோதிடத்தை நினைத்துச் சுயமரியாதைக்காரரை இடித்தெழுதித் தாக்கி இருக்க மாட்டார். மேலும் இவருக்காவது சோதிட ஆராய்ச்சி இருந்திருக்குமானால் திருஞான சம்பந்தர் பிறந்ததைச் சொல்லும் பெரிய புராணச் செய்யுளின் பிரகாரமும் அதன் கீழ் வரைந்துள்ள பொருளின் பிரகாரமும் யோசித்து பார்த்திருந்தால், அரைகுறை சாஸ்திர ஞானம் கூடாதென எழுதியிருக்கமாட்டாரென நினைக்க வேண்டி இருக்கிறது. எப்படி எனில் திருஞான சம்பந்தர் பிறந்த காலம் ஒன்பது கிரகங்களும் உச்சம் என்றும் நல்ல லக்கினம் என்றும் நக்ஷத்திரம் திருவாதிரை என்றும் காணப்படுகிறது. ஒன்பது கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகும். சூரியன் உச்சம் பெற்றான் என்றால் அவன் உச்ச வீடாகிய மேட ராசியி லிருக்க வேண்டுமென்பதாகும். அதுபோல் சந்திரன் உச்சம் பெற்றான் என்றால் அவன் இடப ராசியிலிருக்க வேண்டும்.

சந்திரன் 2லி இரண்டேகால் நக்ஷத்திரத்திற்கு ஒரு ராசி வீதம் அஸ்வனி நக்ஷத்திரம் முதல் கார்த்திகை கால்பாகம் வரை மேஷ ராசி கார்த்திகைபின் முக்காலும் ரோகணியும் மிருகசீர்ஷம் முன்னரையும் சேரும்வரை சந்திரன் இடப ராசியிலிருப்பான். பிறகு மிருகசீர்ஷம் பின்னரையும் திருவாதிரையும் புனர்பூசம் முன்முக் காலும் சேர்ந்து சந்திரன் மிதுன ராசியிலிருப்பான் என்பது சோதிட அரிச்சுவடியின் பாடம். திருவாதிரை நக்ஷத் திரத்தில் திருஞானசம்பந்தர் பிறந்திருப்பாரே யானால் சந்திரனுக்கு உச்சம் எப்படி ஏற்படும்? சந்திரனுக்கு உச்ச வீடு ரிஷப ராசியாயிற்றே! இப்படி இருக்க கிரகம் 9ல் சந்திரனும் ஒருவனாகும்போது அவனுக்கும் உச்ச மெங்கே? சோதிட சாஸ்திர ஆராய்ச்சியில் அரைகுறை சாஸ்திர ஞானம் கூடாதென்றால் யாருக்குக் கூடா தென்பதுதான் தெரியவில்லை. ஒருக்கால் திருஞான சம்பந்தர் சரித்திரத்தைச் சொன்ன பெரியபுராண கர்த் தாவுக்கா? அல்லது அதை வசனமாக மொழி பெயர்த் தவருக்கா? அல்லது அவைகளைச் சொல்லி திரிகிற சைவப் பெரியார்களில் ஒருவரெனவும் தமிழ்ப் பண்டி தர்களில் ஒருவரெனவும் நடித்துத் திரியும் தோழர் சி.கே. சுப்பரமண்ய முதலியார் பி.ஏ. அவர்களுக்கா? அல்லது சாஸ்திர ஞானத்தில் அரை குறை கூடாதென இவரெழுதும் வியாசத்தின் காரணமாக வம்புக்கிழுக்கப் பட்ட சுயமரியாதைக்காரருக்கா? என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை.

உலகமானது கிருஸ்துவர், மகம்மதியர், புத்தர், சமணர் முதலிய பல்வேறு மதத்தையும் இயக்கத்தை யும் கொண்ட சமூகங்களை அடக்கிக் கொண்டிருக்கும் போது சோதிடத்தை ஒப்புக் கொள்ளாத சுமார் 100க்கு 95க்கு மேல்ப்பட்ட மக்கள் இவ்வுலகப் பரப்பிலிருக் கிறார்கள் என்பதாக ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், தன் முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும், தன் மதிப்பாலும் அனேக நூதன விஷயங்களையும் சாதனங்களையும் விஞ்ஞான சாஸ்திர மூலம் மக்களுக்குப் பயன்படுத்து மாறு கண்டுபிடித்து மக்களுக்கு உதவி வரும் இக் காலத்தில், மதம் மக்களுக்கு அபின் என்று கண்டு கொண்டு அவைகளை உதறித் தள்ளிவரும் இக்காலத் தில், மூடப்பழக்க வழக்கங்களும் ஜாதி சமயங்களும் மக்களுக்கு அடிமைப் புத்தியையும் அறியாமையையும் உண்டாக்கி பாழ்படுத்தி வருகிறதென்றறிந்து அவை களை வேறுடன் களைந்தெறியும் இக்காலத்தில், மாண்டவர்களை எப்படிப் பிழைப்பிப்பதென ஆராய்ச்சி செய்து அத்துறைகளிலும் வெற்றிகரமான முடிவுகளை யும் அநுகூலங்களையும் அடைந்து வரும் இக்காலத் தில், மக்கள் இன்னமும் எப்படி சுகித்துவரச் செய்யலாம் என்று ரஷ்யாவின் தலைவர் யோசித்துத் திட்டங் களைக் கற்பித்து வருமிக்காலத்தில், இதைப்பார்த்து அமெரிக்காவின் தலைவர் தம் நாட்டு மக்களின் பொருளாதார சங்கடத்தையும் மற்ற வேலையில்லாத சங்கடங்களையும் தொலைத்து சுகவாழ்வு ஏற்படுத்த எந்தெந்த திட்டங்களை உபயோகிக்கலாமென யோசித்து வரும் இக்காலத்தில், இதைப் போன்றே மற்ற நாடுகளில் சிலதுகளும் யோசித்து வரும் இக்காலத்தில், இவ்வித சோதிட சாஸ்திர வீண் ஆராய்ச்சிகளுக்கும், புரட்டுகளுக்கும் இடமேயில்லை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

நமது தோழர் சி.கே. சுப்ரமணிய முதலியார் பி.ஏ. அவர்கள் "அரைகுறை சாஸ்திர ஞானம் கூடா" தென்னும் கட்டுரை மூலம் சுயமரியாதைக்காரர்களைத் தாக்க நினைத்து எழுதியவற்றை ஆராயும் தோறும் அவர் விஷயத்தில் """மணற் சோற்றில் கல்லாராய்வது" போன்ற பாமர விஷயங்கள் காணப்படுமாயின் இவரது ஆங்கில பி.ஏ. பட்டத்துக்கும், தமிழ் புலமைக்கும், சமயப் பற்றிற்கும், சாஸ்திர ஞானத்திற்கும் என்ன மதிப்பேற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆயினும் இனிமேலாவது நமது இயக்கத்தவர்களை நமது முதலியாரவர்கள் தோழமை கொண்டு அவர்களிடமிருக்கும் உயர்ந்த தன்மைகளாகிற தன்ன லங்கருதாமை, பிறருழைப்பில் வாழாமை, மக்கள் நலத்துக்காகவே தங்கள் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம் செய்துழைத்தல் முதலிய பொதுநலச் சேவை களையும், தூக்கு மேடையிலும் கூட சுயமரியாதைக் காரர்கள் இல்லாதவைகளைச் சொல்லி இவரைப் போல் தற்பெருமைக்கு இச்சிக்கமாட்டார்கள் என்பவை களையும் உள்ளபடி அறிந்து தமது பட்டம் பதவிக ளுக்குத் தகுதியாகவும் சைவர் என்பதற்குத் தகுதியா கவும் தமது மனப்பான்மைகளை மாற்றிக் கொண்டு ஒழுகுவார் என்னும் நம்பிக்கையில் இதைப்பற்றி விரிக்காமல் இத்துடன் விட்டனம்.

**புரட்சி தலையங்கம், 21.01.1934**

## வையவன் தாயார் மறைவு



'சிந்தனையாளன்' இதழுக் குக் கவிதைகள் வழங்கிவரு பவரும், மா.பெ.பொ.க. கட்சி யின் செயல் திட்டங்களுக்கு ஊக்குவித்துப் தருபவருமான தோழர் வையவன் தாயார் திருமதி. மங்கம்மாள் 5.12.2019, வியாழன் திருவண்ணா மலையில் மறைந்தார். அவருடைய மறைவுக்கு மனங்கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- சிந்தனையாளன் ஆசிரியர் குழு**

# இன்றும் சம்பூகன்களும் இராமன்களும்


- இராமியா

சம்பூகன் எனும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓர் இளைஞன் தவம் செய்ததால், ஒரு பார்ப்பன இளைஞன் மரணம் அடைந்துவிட்டதாகக் கூறி, சம்பூகனை இராமன் தலைகீழாகத் தொங்கப்போட்டு, கழுத்தை வெட்டிக் கொன்றான். இதேபோன்ற நிகழ்வு ஒன்று ஒரிசா மாநிலம், மல்கங்கிரி மாவட்டம், இண்ட குடா கிராமத்தில் நடைபெற்று உள்ளது. யாகங்கள் செய்வதினாலும், மந்திரங்களை உச்சரிப்பதினாலும் ஒரு நரை மயிரைக் கருப்பாக்கக் கூடமுடியாது. ஆனால் இவற்றினால் அரிய பெரிய நன்மைகள் கிடைக்கும் என்று நம்பும் ஒரு பெரும் மக்கள் திரள், நம்மிடையே இருக்கவே செய்கிறது. கூடவே இந்த யாகங்களையும் மந்திரங்களையும் பார்ப்பனர்களும் பார்ப்பனர்களின் "ஒப்புதல்" பெற்றவர்கள் மட்டுமே செய்யவேண்டும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள். அதிலும் சாதிப்படி நிலையில் தங்கள் சாதியைவிட உயர்ந்த சாதியில் உள்ளவர்கள் தான் இவற்றைச் செய்யத் தகுதி பெற்ற வர்கள் என்று மனமார நம்புகிறார்கள். அதுகூடப் பரவாயில்லை. தங்கள் சாதியைவிடக் கீழ்நிலையில் உள்ளவர்கள் இவற்றைச் செய்தால் கோபம் பொத்துக் கொண்டு வந்து விடுகிறது.

**ஒரிசா மாநிலம், மல்கங்கிரி மாவட்டம், இண்ட குடா கிராமத்தில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இர்மாகர்த்தமி என்ற 25 வயது இளைஞர் அருள்வாக்கு கூறுதல், பில்லி சூனியம் செய்தல் / எடுத்தல், மந்திரம் உச்சரித்தல் பேன்ற வேலை களைச் செய்து கொண்டு இருந்தார். பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவன் இதுபோன்ற (ஏமாற்று) வேலைகளைச் செய்வதா என்று அக்கிராமத்தில் உள்ள "உயர்" சாதியினர் பொங்கி எழுந்துவிட்டனர்.**

**வருணாசிரம முறையை மதிக்காத அவனை, 21.12.2019 அன்று கிராமப் பஞ்சாயத்துக் கூட்டத்தின் முன் இழுத்து வந்து நிறுத்தினர். அக்கூட்டத்தில் அவருடைய பில்லி சூனிய வேலை களால் அதே கிராமத்தைச் சேர்ந்த ஜகமதி என்ற 23 வயது இளைஞர் மரணம் அடைந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர். அந்த மந்திரவாதி தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு முன்பேயே கூட்டத்தில் இருந்தவர்கள் அவரைத் தடியால் அடித்துக் கொன்றுவிட்டனர். இதன் தெடர்ச்சியாக 22.12.2019 அன்று அப்பகுதி ஆளுகையில் வரும் களிமேலா காவல் நிலையம் நான்கு பேர்களைக் கைது செய்து விசாரித்து வருகிறது.**

வர்ணாசிரம அதர்மம் வெளிப்படையான சட்டமாக இருந்த காலத்திலும் சரி; மறைமுகமாகப் பின்னிப் பிணைந்து உள்ள இந்தக் காலத்திலும் சரி; கடவுள், பிசாசு, பில்லி சூனியம் பேன்ற ஏமாற்று வித்தைகளைப் பயன்படுத்துவதை முற்றுரிமையாகப் பார்ப்பனர்களே பெற்று உள்ளனர். அந்த ஏமாற்று வித்தைகளை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கைக்கொண்டால் காவல் துறை, நீதிமன்றம் பேன்ற அரசின் எந்த அங்கத்திற்கும் செல்லாமல் அவர்கள் ஊர்க்கூட்டத்திலேயே தண்டிக்கப் பட்டு விடுகிறார்கள். அறநிலைக்கும், அறிவு நிலைக்கும் எதிரான இப்படிப்பட்ட கடினமான இருளும், சூறாவளி யும் சூழ்ந்து உள்ள சூழலில்தான் மக்களின் விடு தலைக்காகப் போராட வேண்டி உள்ளது.



தமது வாழ்வின் சமூகப் பொருளுற்பத்தியில் மனி தர்கள் திட்டவட்டமான உறவுகளை மேற் கொள் கிறார்கள். இவை இன்றியமையாதவன; அவர்களது சித்தத்திலிருந்து சுயேச்சையாக நிற்பன. இந்த உற்பத்தி உறவுகள் அவர்களது பொருள் வகையான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலுள்ள ஒரு திட்ட வட்டமான கட்டத்துக்கு இணைப் பொருத்தமாக அமைகின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுத் தொகை, சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப் பாக, உண்மையான அடித்தளமாக அமைகிறது. இவ் அடித்தளத்தின் மீது ஒரு சட்ட மேலடுக்கும் அரசியல் மேலடுக்கும் எழுகின்றன. இந்த அடித் தளத்துக்கு இணைப் பொருத்தமாக சமூக உணர் வின் திட்டவட்டமான வடிவங்கள் அமைகின்றன. மனிதர்களின் வாழ்நிலையைத் தீர்மானிப்பது அவர் களது உணர்வு அல்ல, மாறாக அவர்களது சமூக வாழ்நிலையே அவர்களது உணர்வைத் தீர்மானிக் கிறது.

**- காரல் மார்க்ஸ்**

# வைக்கம் போராட்டத்தில் பெரியார்

## (வைக்கத்துக்கும் பெரியாருக்கும் என்ன சம்பந்தம் என்ற தலைப்பில் இக்கட்டுரை இந்து தமிழ் நாளிதழில் வெளிடப்பட்டுள்ளது)

பழ.அதியமான்

வைக்கம் என்றதும் தமிழ்நாட்டினருக்கு மனத்தில் முதலில் விரியும் உருவமும் பெயரும் பெரியாருடையதுதான். வைக்கம் என்பது கேரளத்தில் பெரும்பான்மையருக்கு வைக்கத்தப்பன் குடிகொண்டுள்ள ஓர் ஊர். கொஞ்சம் வரலாறு தெரிந்தவர்களிடம் கேட்டால் சத்தியாகிரகம் நடைபெற்ற ஓரிடம். இன்னும் சமூக உணர்வாளர்களிடம் வினவினால் ஈழவர் முன்னேற்றத்தில் ஒரு மைல்கல்லான போராட்டம் நடந்த இடம் என்பர். ஆனால், தமிழ்நாட்டில் வைக்கம் என்றால் சமூக நீதியின் அடையாளம். அதை அடையப் போராடிய வீரர் பெரியார் என்பதாகப் பதில் விரிவடையும். 1924-25-ல் வைக்கம் போராட்டம் நிகழ்ந்த தருணத்தில் ஈ.வெ.ராமசாமி நாயக்கரை வைக்கம் வீரர் என்று எழுதினேன். அவருக்கு அது ஒரு பட்டப்பெயராகவே பிற் காலத்தில் ஆகிவிட்டது என்று திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.

### எப்படித் தொடங்கியது போராட்டம்?

அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தின் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் சிவன் கோயிலைச் சுற்றிலுமுள்ள நான்கு தெருக்களில் ஈழவர் உட்பட தாழ்த்தப்பட்டோர் நடக்கத் தடை இருந்தது. இத்தகைய தடை கேரளம் முழுவதும் அளாவியது. இத்தடையை நீக்கி அவ்வீதியில் நடக்க உரிமை வேண்டி நிகழ்ந்த சத்தியாகிரகமே வைக்கம் போராட்டம். ஈழவர் தலைவர் டி.கே.மாதவன் பல்லாண்டு முன்முயற்சியில் கிளர்ந்த இந்த வைக்கம் போராட்டத்தை உற்சவ மூர்த்தியாகவும் மூளை யாகவும் முறையே கேரள காங்கிரசுத் தலைவர்கள் கே.பி.கேசவ மேனனும் ஜார்ஜ் ஜோசப்பும் தொடங்கி வைத்தனர். தமிழ்நாட்டுப் பெரியார், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி போன்றோர் நடத்துநராகப் போராட்டத்தைச் செயல்படுத்த, ஆலோசகரான காந்தி நிறைவில் வந்து முடித்து வைத்தார் எனச் சுருக்கமாக வைக்கம் போராட்டச் சித்திரத்தை வரையலாம். இடையில் மன்னத்து பத்மநாபன் போன்றோர் பெரும் துணைவலியாக அமைந்தனர்.

1924 மார்ச் 30 அன்று கேரள காங்கிரசு ஆதரவில் தொடங்கிய போராட்டம் ஏப்ரல் முதல் வாரத்திலேயே தன் போராளிகள் அனைவரையும் சிறைக்கு அனுப்பிவிட்டுத் தலைவர்களின்றி தத்தளித்து நின்றது. வழிநடத்தும் தலைவர் களைக் கேட்டு காந்தி, ராஜாஜிக்கும், அவரையே வரும்படி வேண்டி பெரியாருக்கும் ஜார்ஜ் ஜோசப் எழுதினார். முதல் இருவரும் கோரிக்கையை நிராகரித்தனர். தமிழ்நாடு காங்கிரசு கமிட்டித் தலைவரான பெரியாரோ கேரள அழைப்பை ஏற்று வைக்கம் சென்றார். தான் கட்டாயம் வந்தே தீர வேண்டுமா என்று இரு முறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே பெரியார் கிளம்பினார். தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் என்ற தன்மையிலேயே சென்றமையால், தலைமைப் பொறுப்பைத் தற்காலிகமாக ராஜாஜியைப் பார்க்கச் சொல்லி கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்றார். வைக்கம் சென்ற 13 ஏப்ரல் 1924 முதல் அவர் தலைமையில் நடைபெற்ற வெற்றி விழா நிகழ்ந்த 29 நவம்பர் 1925 வரையான காலத்தில் பெரியார் போராட்டத்துக்குப் பங்களித்தார்.

### எப்படி நடந்தது போராட்டம்?

தடைசெய்யப்பட்ட சாலைகளின் தடுக்கப்பட்ட இடங்களில் தினமும் குறைந்தது மூன்று பேர் சத்தியாகிரகம் செய்வர். 604 நாள் போராட்டம் நிகழ்ந்தது. பல நாள் பெரியார் தலைமை தாங்கினார். போலீசாரின் தடியடியும் வாயடியும் குறைவின்றி நிகழ்ந்தன. வைதிகர் ஏற்பாடு செய்த அடியாள்களின் அக்கிரமங் களுக்கும் குறைவில்லை. சத்தியாகிரகிகளின் கண்ணில் சுண்ணாம்பைப் பூசிய சம்பவங்களும் நிகழ்ந்தன. மக்கள் ஆதரவைத் திரட்ட வைக்கத்தைச் சுற்றிலும் கிராமங்களிலும் சேர்த்தலை, வர்க்கலை, கோட்டயம் போன்ற நகரங்களிலெல்லாம் ஓயாமல் பிரச்சாரம் செய்தார் பெரியார். தெற்கே திருவனந்தபுரம், நாகர்கோவில் வரை அவரது பிரச்சாரப் பயணம் நீண்டது. மக்களிடமும் வியாபாரிகளிடமும் நிதி பெற்றார்.

வைக்கம் சத்தியாகிரகத்தை அகில இந்திய இயக்கமாக்கக் கேரளத் தலைவர்கள் கோரியபோது காந்தி இணங்கவில்லை. இயக்கம் வலு இழக்கிறதே என்று அவர்கள் சொன்னபோது அதைச் சாகவிடாமல் சென்னை மாகாணத்தவர் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லிவிட்டார். எனவே, பெரியார் உட்பட தமிழ்நாட்டுத் தலைவர், தொண்டர்களின் பங்களிப்புக்குக் காந்தியின் பொது அனுமதி இருந்தது எனக் கருதலாம். இத்தகைய வெளியார் உதவியின் இன்றியமையா மையைக் காந்தியை விடவும் சமஸ்தான ரெசிடெண்ட் சி.டபிள்யூ.இ. காட்டன் சரியாக உணர்ந்திருந்தார்: சாலையை அனைவருக்கு மாகத் திறப்பது என்ற பிரச்சினை உள்ளூர் சம்பந்தப்பட்டதாகவே இருப்பினும், வெளியிலிருந்து மட்டும் இதற்கு உதவி வரா திருந்தால் உண்மையில் இந்த இயக்கம் எப்போதோ பிசுபிசுத்துப்போயிருக்கும் என்று 21 ஏப்ரல் 1924 அன்றைய குறிப்பில் அவர் சொல்கிறார்.

பிந்நாளில் 1980-களில் வைக்கம் போராட்டத்தைப் பற்றிய முதல் ஆய்வு நூலை எழுதிய கேரள வரலாற்றுப் பேராசிரியர் டி.கே.ரவீந்திரன் பெரியாரின் வரவினால் இயக்கத்திற்குப் புதிய உயிர் கிடைத்தது என்று பதிந்துள்ளார். மிகச் சமீபத்தில், காந்தியின் அகிம்சைத் தொடர்பில் வைக்கம் போராட்டத்தை ஆய்வுசெய்து அமெரிக்க ஆய்வாளர் மேரி எலிசபெத் கிங் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அவருக்குக் கேரளப் பேராசிரியர் கே.கே.குசுமான் அளித்த நேர்முகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக இந்தியா முழுவதும் அறிமுகமாகியிருந்த பெரியார்

தன் வெடிப்புறப் பேசும் திறனால் இக்கட்டான நேரத்தில் போராட்டத்தை வளர்த்தெடுத்தார் என்று விவரித்துள்ளார்.

### என்ன செய்தார் பெரியார்?

அரசினரும் கேரளரும் மெச்சும்படியாக வைக்கத்தில் பெரியார் என்னதான் செய்தார்? மக்கள் ஆதரவைத் திரட்டும் பிரச்சாரமே அவரது முதன்மையான பணி. நாடு என்ன உங்கப்பன் வீட்டுச் சொத்தா? நாட்டை பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணித்துவிட்ட பிறகு, நாடே கோயில் சொத்துதானே! என்று மன்னரைப் பார்த்துப் பேசினார் பெரியார். மன்னர் திருமனசைப் பாராட்டலாமே தவிர எதிர்த்து பேசுவது கூடாது என்பது திருவாங்கூர் சமஸ்தான சம்பிரதாயம்.

கிறித்துவரும் முசுலாமியர்களும் அந்தத் தெருவில் நடக்கலாம். இந்துவான ஈழவர் நடக்க அனுமதி இல்லை. இந்த முரண் ஏன் என்பது சத்தியாகிரகிகளின் வாதங்களுள் ஒன்று. அதற்குப் பதில் அளித்த அதிகாரிகள், அவர்களையும் வேண்டு மானால் தடுத்துவிடுகிறோம் என்று கூறினர். இதைக் கிண்டல் செய்தார் பெரியார். நாங்கள் பசியாக இருக்கிறோம் என்று சொன்னால், பசியாக இருக்கிறோம் என்று நீங்கள் ஏன் சொல் கிறீர்கள் என்றால், மற்றவர் சாப்பிடுவதை நீங்கள் பார்க்கிறீர்கள் என்று அரசாங்கம் சொல்கிறது. அவர்கள் சாப்பிடும் உணவைப் பறித்துவிடுகிறோம் என்கிறது என்றார்.

ஈழவரின் மீதான தீண்டாமையை மறுத்துப் பேசும்போது பெரியார் பின்வருமாறு பேசினார். உடம்பின் கழிவுகளைச் சுத்தப்படுத்துவது போன்ற குறிப்பிட்ட பணிகளுக்காக இடது கை பயன்படுகிறது. ஒவ்வொரு கைக்கும் தனித் தந்தை, தாய் உண்டா? இடது கையைத் தொடும்போதெல்லாம் வலது கை குளித்து முழுக வேண்டும் என்று நினைக்கிறதா? நாம் கடவுளைத் தொழும்போது வலது கையுடன் மட்டும் செல்கிறோமா? கோயிலுக்குச் செல்லும்போது நமது இடது கையை விட்டுவிட்டுச் செல்கிறோமா? வலது பக்கம் இடது பக்கத்தைவிட உயர்வானது என்றால் இடது கண்ணால் நம்மைப் பார்ப்பவரைக் குற்றம் சொல்லுகிறோமா அல்லது வலது காலால் உதைபடும்போது மகிழ்ச்சியடைகிறோமா? என்று சாதாரண மக்களுக்கும் புரியும்படியாகப் பேசினார் பெரியார்.

தீண்டாமையைக் கண்டித்து இவ்வளவு வேகமாகப் பேசியோர் தமிழ்நாட்டிலிருந்து சென்ற தலைவர்களான பெரியாரும் கோவை அய்யாமுத்துவும்தான். கிளர்ச்சிக்காரர்கள் அனைவரையும் சிறைப்படுத்த அரசாங்கம் முயன்றது. வைக்கம் வந்த பதினைந்து நாள்களுக்குள் பெரியார் பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. கோட்டயம் மாவட்டத்துக்குள் நுழையவும் தடை போடப்பட்டது. பின்னர், அந்தத் தடை கொல்லம் மாவட்டத்துக்கும் நீண்டது. எந்தத் தடையையும் மதிக்காமல் பெரியார் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார், சமஸ்தானம் முழுவதும் பிரசாரப் பயணம் மேற்கொண்டார். அரசாங்கம் பொறுக்க முடியாமல் ஒருகட்டத்தில் அவரைக் கைதுசெய்தது. நீதிமன்ற விசாரணையும் வைக்கத்தில் நிகழ்ந்தது. இந்த நீதிமன்றம் நியாயம் செய்யும் என்ற நம்பிக்கை இல்லை. விசாரணை வெறும் வேடம். நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க முடியாது என்று அறிவித்ததோடு, சமாதானம் உண்டுபண்ணவே நான் வைக்கத்துக்கு வந்தேன், எவ்விதமான தண்டனை விதித்தாலும் ஏற்கத் தயார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார் பெரியார். இதையடுத்து நீதிமன்றம் 22 மே 1924-ல் ஒரு மாத வெறுங்காவல் தண்டனை அளித்தது. ஆறுக்குட்டியில் பெரியார் அத்தண்டனையை அனுபவித்தார்.

### அடுத்தடுத்த சிறைத் தண்டனைகள்

சிறையிலிருந்து விடுதலை அடைந்த பெரியார் மீண்டும் நேராக வைக்கம் போனார். ஈரோட்டுக்குச் செல்வார் என்று எதிர்பார்த்த அரசாங்கம், ஏமாற்றமும் கோபமும் அடைந்தது. கோட்டயம் மாவட்டத்திற்குள் நுழைவதற்குத் தடை அமலில் இருக்கும்போது அவரை வைக்கத்திற்குள் நுழைய ஏன் அனுமதித்தீர்கள்? என்று மாவட்டக் காவல் துறைக் கண்காணிப் பாளரை மாவட்ட நீதிபதி கடிந்துகொண்டார். ஆனால், அரசாங்கம் உடனே கைதுசெய்யவில்லை.

அரசாங்கத்தின் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பெரியார் தொடர்ந்து பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ராட்டையைப் போராட்டக் களத்தில் கொண்டுசெல்வதில் காவல் துறைக்கும் சத்தியாகிரகிகளுக்கும் பிரச்சினை எழுந்தபோது பெரியார் அதைத் தீர்த்துவைத்தார். தொடர்ந்து அவரை அரசாங்கம் வெளியில் விட்டுவைக்கவில்லை. முதல் சிறைவாசம் முடிந்து விடுதலையான 27-வது நாள் (18 ஜூலை 1924) மீண்டும் கைதுசெய்தது. இந்த முறையும் பெரியார் நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க மறுத்தார். முதல் முறை எளிதான தண்டனை விதித்தும் எதிரி திருந்தவில்லை என்பதாலும், இரண்டாம் தடவையாக அரசு உத்தரவை மீறி நடந்திருப்பதாலும் நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

இம்முறை ஆறுக்குட்டி சிறையில் பெரியாரை அடைக்க வில்லை. மற்ற சத்தியாகிரகிகள் இருந்த திருவனந்தபுரத்துக்கும் அனுப்ப அரசாங்கம் விரும்பவில்லை. கோட்டயம் மாவட்டச் சிறையில் அடைக்க விரும்பியது. அதற்காக வைக்கத்திலிருந்து புறப்பட்ட படகு, 20 மைல் தூரத்துக்குப் பிறகு பெருமழை, புயல் காரணமாக மேலும் போக முடியாமல் திரும்பிவிட்டது. வைக்கம் காவல் நிலையச் சிறையில் சில நாள் வைத்திருந்து பின் திரு வனந்தபுரம் மத்தியச் சிறைக்கே அனுப்பி வைத்தது அரசாங்கம்.

திருவனந்தபுரம் மத்தியச் சிறையிலிருந்த கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்ட சத்தியாகிரகிகள் அனைவரும் அரசியல் கைதிகளாகக் கருதப்பட்டு மரியாதையுடன் நடத்தப்பட்டனர். ஆனால், பெரியார் அவ்வாறு நடத்தப்பட வில்லை. கால்களில் விலங்குச் சங்கிலி, தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய், முழங்காலுக்குக் கீழே தொங்குகிற ஒரு வேட்டி, கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட மரப்பட்டை. இவற்றுடன் ஈ.வெ.ராமசாமி கொலைகாரர்களோடும் கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்துகொண்டிருந்தார்.

தண்டனை அடைந்த ஒரு சாதாரண கைதி ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வானோ அதைவிட இருமடங்கு வேலை செய்கிறார். இது பெரியாருடன் சிறையிருந்த கே.பி.கேசவ மேனனின் நேரடி சாட்சியம்.

பெரியாருக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையைப் பொறுத்துக்கொள்ள இயலாத கேசவ மேனன், பெரியாருக்கு அரசியல் கைதி அந்தஸ்து அளிக்குமாறு சிறையிலிருந்தே அரசாங்கத்திடம் வேண்டிக்கொண்டார். எனினும், விடுதலை அடையும் வரை அதற்குப் பதில் வரவில்லை என்று தன் வாழ்க்கை வரலாறான கடந்த காலத்தில் குறித்துள்ளார்.

### பெரியாருக்கு ஆதரவாக ராஜாஜி

பெரியாரின் நிலை ராஜாஜியையும் வருத்திற்று. பெரியாருக்கு ஆதரவாக அரசாங்கத்தைக் கண்டித்துப் பத்திரிகையில் எழுதினார் அவர். ஈ.வெ.ராமசாமி நாயக்கரைக் கடுங்காவல் தண்டனையில் வைத்திருப்பதும், இரும்பு விலங்கிட்டிருப்பதும், அவருக்குச் சிறை உடை அணிவித்திருப்பதும், மற்ற சத்தியாகிரகிகள் சரியாகப் பெற்றுள்ளவற்றை அவருக்கு மறுப்பதும் நியாயப்படுத்தவே முடியாதவை என்று தி இந்து ஆங்கில நாளிதழில் எழுதியிருந்தார் ராஜாஜி (27 ஆகஸ்ட் 1924). இந்தச் சமயத்தில் பெரியாருக்கு ராஜாஜி சூட்டிய புகழாரம் முக்கியமானது. ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஒரு தளர்வுறாத ஆன்மா. செல்வ வளத்தின் மகிழ்ச்சிகளையும் பதவிகளையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கடினமான இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளார். பெரும்பாலான நம்மைப் போல அல்ல; உண்மையிலேயே!

திரு.வி.க.வும் இக்கொடுமையைச் சாடினார். திருவாங்கூர் அரசாங்கம் ஒரு சத்தியாகிரகியை இவ்வாறு துன்புறுத்துவது தருமமோ என்று கேட்கிறோம் என்று மனம் நொந்தார் திரு.வி.க.

### சிறை தளர்த்த முடியாத வீரர்

இரண்டாம் முறையாகச் சட்டத்தை மீறியிருப்பதால் தனிச்சலுகை எதுவும் அவருக்கு வழங்க வேண்டாம் என்ற மாவட்ட நீதிபதியின் கருத்துக்குள் அரசாங்கம் ஒளிந்துகொண்டு விடுதலை வரை துன்புறுத்தியது. புதிய மன்னர் பொறுப்பேற்றதையடுத்து 30 ஆகஸ்ட் 1924 அன்று பெரியார் உட்பட 19 சத்தியாகிரகிகள் விடுவிக்கப்பட்டனர். விதிக்கப்பட்டிருந்த கடுந்தண்டனைக்காகக் கேரளமும் தமிழகமும் வருந்த, விடுதலையான பெரியாரோ, நாகர்கோவிலில் பேசும்போது, நான் சிறையில் பட்ட துன்பத்திற்காக யாரும் வருந்த வேண்டாம். விடுதலைதான் என்னை வருத்தப்பட வைத்துவிட்டது என்று வேதனையையும் வேடிக்கையாக எதிர்கொண்டார்.

அடுத்து பெரியார், கே.பி.கேசவ மேனன் உள்ளிட்டோர் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். பொதுச்சாலைகளில் எல்லோரும் நடமாடலாம் என்பதை அனுமதிப்பதற்குரிய அறிகுறியாகவே எங்கள் விடுதலையைக் கொள்கிறோம். அப்படி நடக்காவிடில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம் என்று அவ்வறிக்கையில் தெரிவித்தனர். இவ்வறிக்கை மூலம் அரசின் விடுதலையைச் சலுகையாக ஏற்காமல் அதையும் ஒரு நிபந்தனையாக மாற்றினர் சத்தியாகிரகிகள். கேட்டிலும் துணிந்து நின்றார் பெரியார்.

ஒன்றரை மாதங்களுக்கு மேல் சிறையிருந்த பெரியார், இந்த விடுதலைக்குப் பிறகும் வீட்டுக்குத் திரும்பவில்லை. வைக்கத்துக்கே சென்று போராட்டத்தைத் தொடர்ந்தார். நெடுங்கணா, நாகர்கோவில் போன்ற ஊர்களில் பத்து நாள் வரை பிரச்சாரம் செய்துவிட்டு, ஈரோட்டுக்கு செப்டம்பர் 10-ம் தேதி திரும்பினார். காத்திருந்ததுபோல் சென்னை மாகாணக் காவல் துறை 11-ம் தேதி பெரியாரைக் கைதுசெய்தது. இந்தக் கைது ஆறு மாதங்களுக்கு முன்பு மயிலாப்பூரில் பேசிய அரசு விரோத பேச்சு ஒன்றுக்கானது. வேறு அரசாங்கத்தால், வேறு காரணத்துக்காக, வேறிடத்தில் கைது நிகழ்ந்திருப்பினும் அவரை மீண்டும் வைக்கத்துக்குச் செல்ல ஒட்டாமல் தடுப்பதே நோக்கம் என்று ஊகிக்கலாம். எது எப்படியோ வைக்கத்துக்கு உடனடியாகச் செல்ல விடாமல் இந்தக் கைதும் வழக்கும் அவரைத் தடுத்துவிட்டன.

பெரியார் வைக்கத்தில் இருந்த காலத்திலும் சரி பிறகும் சரி, போராட்டம் கடும் நெருக்கடிகளைச் சந்தித்தது. பண நெருக்கடி அதில் முதலாவது. தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி, பெரியார் வழியாக ரூ.1000 கொடுத்தது. மற்ற பிரச்சினைகளை ஆலோசித்து முடிவெடுக்க பல ஆலோசனைக் கூட்டங்கள், சமாதானத் தூதுகள், பிரச்சாரக் குழுக்கள், மகளிர் அணிகள் அவ்வப்போது உருவாயின. அவை பலவற்றில் பெரியாரும் நாகம்மையாரும் இடம்பெற்றிருந்தனர். இவ்வகையில் திவானைச் சந்தித்து சமாதானம் பேச ஏற்பட்ட எட்டுப் பேர் கொண்ட குழுவில் பெரியாரும் ஒருவர்.

பெரியார் வைக்கத்தில் போராடிக்கொண்டிருந்த காலத்தில் அங்கு வந்த தலைவர்கள் அனைவரும் அவரைக் கலந்தாலோசித்தனர். ஆரிய சமாஜத் தலைவர் சிரத்தானந்தர் போராட்டம் நலிவுற்றிருந்த ஒரு கட்டத்தில் அதை எடுத்து நடத்தவும் ஒப்புக்கொண்டார். ராஜாஜி வைக்கம் வந்தபோது காவல் நிலைய சிறையில் இருந்த பெரியாரைச் சந்தித்த பிறகே ஆசிரமம் சென்றார். வரதராஜுலு நாயுடு, எஸ்.சீனிவாச ஐயங்கார், டி.எஸ்.சொக்கலிங்கம் போன்றோர் சத்தியாகிரக ஆசிரமத்தில் அவரைச் சந்தித்தனர். காங்கிரசுத் தலைவர் சி.வி.வேங்கட ரமண ஐயங்கார் பெரியாருடன் பிரச்சினைக்குரிய சாலைகளைப் பார்வையிட்டார். ஆக இந்திய, தமிழகத் தலைவர்கள் பலரும் பெரியாருடன் போராட்டம் குறித்து விவாதித்தனர்.

### காந்தி பெரியார் சந்திப்பு

போராட்டத்தின் நிறைவுக் கட்டத்தில் வைக்கம் வந்த காந்தியுடனும் பெரியார் தொடர்பில் இருந்தார். தில்லியிலிருந்து சென்னை வழியாக வந்த காந்தியை ஈரோட்டில் (8 மார்ச் 1925) வரவேற்றுவிட்டு, வர்க்கலையில் (12 மார்ச் 1925) அவரோடு இணைந்துகொண்டார். அதேபோல், நாராயண குருவைச் சந்தித்த காந்தியுடனான சிறு குழுவில் அவர் இருந்ததையும் காவல் ஆணையர் பதிவுசெய்துள்ளார். பெரியாரைக் கலந்தா

லோசித்த பிறகே ராணியாரைக் காந்தி சந்தித்துப் பேசியதாகப் பல இடங்களில் பிற்காலத்தில் தெரிவித்துள்ளார் பெரியார்.

வைக்கம் வருகையின்போது காவல் துறை ஆணையருடன் காந்தி மேற்கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் விளைபயனாய், ஓராண்டுக்கு முன்னால் பெரியாருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்பட்டது. ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை ஆணையைத் திருவாங்கூர் கவர்ன்மென்டார் வாபஸ் வாங்கிக்கொண்டுவிட்டார்கள் என்பதைக் கேட்க வாசகர்கள் மகிழ்ச்சிடைவார்கள் என்று காந்தி யங் இந்தியாவில் (23 ஏப்ரல் 1925) தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்தார்.

**மனைவியுடன் களம் சென்றார்**

**காங்கிரசின் தமிழ்நாட்டுத் தலைவராகவே பெரியார் போராட்டத்தில் கலந்துகொண்டார். தனிப்பட்ட முறையில் அல்ல; அவர் வழியாகவே தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி ஆயிரம் ரூபாயைப் பேராட்டத்துக்கு அனுப்பியது. கிடைக்கும் பெயர் விவரப்படி, 50 பேர் அளவிலான தொண்டர்களுடன் சென்று அவர் அங்கு போராடினார். தன் குடும்பத்தையும் போராட்டத்தில் ஈடுபடுத்தினார். 15 மே 1924-ல் வைக்கம் வந்த நாகம்மையார், தொடர்ந்து நான்கு மாதம் சுற்றுப்பயணம் செய்ததற்கு ஆதாரங் கள் கிடைக்கின்றன. நாகர்கோவில் தலைவர்கள் சிலரும் குடும்பத்துடன் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மிக முக்கியமான செய்தி, பெரியார் தன் வாழ்வின் நடுப்பகுதியில் வைக்கத்தில் 74 நாட்கள் சிறையிலும், 67 நாட்கள் வெளியிலுமாக 141 நாட்களைப் போராட்டத் துக்காகச் செலவிட்டார் என்பதாகும்.**

ஆலோசகர் காந்தி கொள்கை அடிப்படையில் போராட்டத்தில் ஈடுபட்ட அயல் மதத்தவரை வெளியேற்றினார், சத்தியாகிரகிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை நிறுத்தினார், அகாலியர் நிறுவியிருந்த தரும உணவுச்சாலையை மறுத்தார், அயலி லிருந்து தொண்டர்களோ நிதியோ வருவதைத் தடைசெய்தார். இப்படியான காந்தியின் அறிவுறுத்தல்களால் போராட்டம் பல இன்னல்களைச் சந்தித்தது, இரு முறை சத்தியாகிரகிகள் நேரடியாகச் சென்று அவரிடம் முறையிட்டனர். இயக்கமும் பலவீனப்பட்டுவந்தது. எனினும், ஜார்ஜ் ஜோசப் தவிர, பொதுவெளியில் காங்கிரசுக்காரர் எவரும் எதிர்ப்பேச்சு பேசவில்லை, பெரியாரும் பேசவில்லை. ஒரு உண்மை சத்தியாகிரகியாகவே களத்தில் அவர் விளங்கினார். பின்னாளில் கருத்து வளர்ச்சியும், அதனால் பார்வை மாற்றமும் நேர்ந்த நிலையில் பெரியார் காந்தியின் அறிவுறுத்தல்களை விமர்சித் தார். சத்தியாகிரகத்தை நிறுத்திவிடவே காந்தியும் இராஜாஜியும் விரும்பினர் என்று இதே அறிவுறுத்தல்களையே காட்டி விமர்சித்தார்.

**தீர்வு தந்த போராட்டம்**

எப்படியோ நவம்பர் 1925-ல் போராட்டம் - பெரியாருக்கு ஏன் காந்திக்கும்தான் - முழு மகிழ்ச்சியைத் தராத, நான்கில் மூன்று தெருக்களில் மட்டும் அனுமதி என்ற ஒருவகை சமாதானத்துடன் முடிவுக்குவந்தது. சத்தியாகிரகத்தின் வெற்றி விழாவுக்குத் தலைமை தாங்க பெரியாரைக் கேரளர் அழைத்த னர். அயலிலிருந்து கலந்துகொண்ட ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. சத்தியாகிரகத்தின் வெற்றியைப் பற்றியும் தோல்வி யைப் பற்றியும் பேசுவதற்கு அதற்குள் காலம் வந்துவிடவில்லை. தெருவில் நடக்க உரிமை கேட்டவர்களைச் சிறைக்கு அனுப்பிய அரசாங்கம், தெருவில் நடப்பதற்கு இப்போது கையைப் பிடித்து அழைத்துச் செல்ல முன்வந்திருப்பதைப் பார்த்தால் சத்தியாகிரகத் துக்கும் மகாத்மாவுக்கும் எவ்வளவு சக்தி இருக்கிறது என்பது விளங்குகிறது என்று பெரியார் வியந்தார் (குடிஅரசு, 6 டிசம்பர் 1925). போராட்டத்தின் வெற்றிவிழாவைப் பெரியாரின் தலை மையில் கொண்டாடியது மிக முக்கியத்துவமுடைய செய்தி யாகும். கேரளர்கள் நன்றி மறக்காதவர்கள். இன்றும் வைக்கத்தில் கேரளர்கள் நன்றியைத் தெரிவிக்கும் விதமாக கொண்டாடப் படுகிறது பெரியார் சிலை. தமிழ்நாட்டில்தான் சிலர் கேட்கிறார்கள், பேசுகிறார்கள், பெரியாருக்கும் வைக்கம் போராட்டத்துக்கும் என்ன சம்பந்தம்? என!

## “சக்குபாய் இல்லம்” திறப்புவிழா

பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் தணிக்கையாளர் கே.எசு.முருகன் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் கரியமங்கலம் ஊராட்சி, புதுக்குளம் கிராமத்தில் கட்டிய புதிய இல்லத்திற்குச் ‘‘சக்குபாய் இல்லம்’’ எனத் தன் தாயார் பெயரிட்டு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று திறப்பு விழா நடத்தினார். அறக்கட்டளையின் சார்பில் ஆலோசனைக்குழு உறுப்பினர் ப.வடிவேலு கலந்து கொண்டார்.

செய்தி : **ப.வடிவேலு**

## பெரியார் தொண்டர் கோ.மதியழகன் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

அரியலூர் மருத்துவர் ந. வசந்தா மதியழகன் தம் துணைவர், பெரியார் பெருந்தொண்டர் கோ.மதியழகன் அவர்களின் இரண்டாம் ஆண்டு (சென்ற டிசம்பர் 26) நினைவு நாளையொட்டி ‘‘சிந்தனையாளன்’’ வளர்ச்சி நிதியாக ரூ.2000/- அளித்துள்ளார்.

செய்தி : **கு. தொல்காப்பியன்**

# கொள்கைச் சான்றோன் கோ.செயவேல் மறைவு

- பாவலர் வையவன்



கோ.செயவேல்

திருவண்ணாமலை மாவட்டம் பெரிய கோளாப்பாடி அரசு மேநிலைப் பள்ளியிலிருந்து, 2006 ஜூனில் பொது மாறுதல் பெற்று அதே மாவட்டம் மெய்யூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் பட்டதாரித் தமிழாசிரியராகப் பணி ஏற்கச் சென்றேன்.

தலைமையாசிரியர் அறையில் அவருக்குரிய நல்ல நாற்காலியைச் சற்றுத் தள்ளிவைத்துவிட்டு வலப்பக்கம் கைத்தாங்கி உடைந்திருந்த ஒரு மர நாற்காலியில் அமர்ந்திருந்தவரிடம் தலையமையாசிரியர் வரலீங் களா? என்று கேட்டேன். நான்தான் தலைமையாசிரியர், என்ன வேலையா வந்தீங்க? சொல்லுங்க என்றார்.

கோளாப்பாடி பல்லியிலிருந்து இந்தப் பள்ளிக்கு மாற்றலாகி வந்திருக்கேன் என்றேன்.

அப்படியா, 'ஜாய்னிங் ரிப்போர்ட்' எழுதிக்கொடுங்க என்றார். எழுதிக் கொடுத்தேன்.

படித்துப் பார்த்துவிட்டுச் சட்டைப் பையிலிருந்து பச்சை மைப் பேனாவை எடுத்தார். ஒரு இடத்தில் ஒற்றுப்பிழை இருந்தது. அதைத் திருத்தினார். என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. சாட்டையால் அடித்தது போலிருந்தது எனக்கு. எழுதி அப்படியே நீட்டிவிட்டேன். இன்னொரு முறை படித்துப் பார்த்துவிட்டுக் கொடுத்திருந்தால் அந்தப் பிழையை நானே திருத்தியிருப்பேன். அவருடைய எண்ணம் எனக்குப் புரிந்தது. பிழையில்லாமல் எழுதத் தெரியல. நீயெல்லாம் ஒரு தமிழ் வாத்தியாரா? என்கிற தொனி அது. அதனால்தான் என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. சராசரியாகச் சம்பளம் வாங்கித் தின்னும் ஒருவன் என முடிவுசெய்துவிட்டார்.

சேர்வதற்கான நடைமுறைகள் முடிந்து, அதே பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் கேட்டேன். அவர் ஏன் தலை மையாசிரியருக்குரிய நாற்காலியில் உட்காராமல் உடைந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்?. அவர் இயல்பில் எளிமையானவர். பந்தா பிடிக்காது. அனா வசியமாகப் பேசமாட்டார். மேலும் பிளாஸ்டிக் நாற் காலியில் உட்கார மாட்டார். மர நாற்காலியில்தான் உட்காருவார். இன்னும் ஒரு ஆண்டுதான் அவருக்குப் பணிக்காலம் என்ற பதில்வந்தது.

நாலுநாள் கழித்து பத்தாம்வகுப்பு மாணவர்களை அழைத்து, புதுசா வந்திருக்கிற தமிழ் வாத்தியார் எப்படிப் பாடம் நடத்துகிறார்? என்று கேட்டிருக்கிறார். மிகவும் நன்றாக பாடம் நடத்துறார் அய்யா. அதுமட்டுமில்ல. எங்களுக்குத் தேவையான எல்லா பேனா, பென்சில், ஏடுகள் அனைத்தையும் வாங்கிவந்து கொடுத்துவிட்டார். யாருகிட்டயும் காசும் வாங்கல. அதே நேரத்துல செம ஸ்டிக்ட்டு. சொன்ன பாட வேலைகளைச் செய்யலேன்னு வைங்க... உதைக்கும் பஞ்சமே கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னபிறகுதான் என் ஒற்றுப் பிழையே சரியாகியிருக்கிறது. என்மீது நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பிறகு கொஞ்சம் முகம்கொடுத்துப் பேசலானார். அந்தப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரின் தந்தை சிந்தனையாளன் இதழின் சந்தாதாரர் போல இருக்கிறது. எனவே நான்தான் வையவன் என்பதும் அதில்நான் கவிதை எழுதுகிறேன் என்பதும் சிலருக்குத் தெரியவந்தது. ஒருமுறை அனைவர்க்கும் ரெவின்யூ ஸ்டாம்ப் என்ற கவிதையை நான் அதில் எழுதியிருந்தேன். பொதுவாக ஆசிரியர்கள் வேலையைச் சரியாகச் செய்தாலும் செய்யாவிட்டாலும் சம்பளம் மட்டும் அனைவர்க்கும் ஒன்றுதான் என்கிற கருத்துடைய நக்கலான கவிதை அது. பாருங்கள் இவரும் ஆசிரியராக இருந்துகொண்டே எப்படியெல்லாம் எழுதியிருக்கிறார் என்று அதைக் கொண்டுபோய் தலைமையாசிரியரிடம் காட்டியிருக்கிறார்கள்.

'இது யார் எழுதிய கவிதை?'

"நம்ம தமிழாசிரியர்தான்"

"அவன்பேர் லோகநாதன்தானே?"

"ஆமாம் அய்யா... அவருடைய புனைப்பெயர் வையவன்"

சரி, நம்மகிட்ட லோகநாதன்தான் வேல செய்யறாரு. இதுகுறித்து நம்ம வையவன்கிட்ட பேச முடியாது. பள்ளிக்கூடத்தப் பொறுத்த அளவில நல்லா வேல செய்யுறாரு. எந்தக் குறையும் சொல்லமுடியாது. சரி போங்க பாத்துக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்.

மாலை 6.00 மணிக்குத் தொலைபேசி வந்தது. நான் தலைமையாசிரியர் ஜெயவேல் பேசறேன் என்று தன் இருப்பிட அடையாளங்களைச் சொல்லி வீட்டிற்கு வரச் சொன்னார். போனேன். வீட்டில் தரையில் கோரைப்பாய் போட்டு உட்கார்ந்திருந்தார். என்னை சோபாவில்

உட்காரச் சொன்னர். நானும் அவரோடு பாயில் அமர்ந்தேன்.

நீ யாரு?

லோகநாதன். உங்கள்பள்ளித் தமிழாசிரியர். ஏன் அய்யா அப்படிக் கேக்குறீங்க?

அது தெரியும். வையவன்கிறது யாரு?

அய்யா. அதுவும் நான்தான். லோகம் நாதம் எல்லாம் தமிழா இல்லேங்கிறதால வையவன்னு வச்சுகிட்டேன்.

சிந்தனையாளன் மாத இதழை எடுத்து என் முன்னால் போட்டு, இதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டார்.

எனக்குப் புரிந்துவிட்டது. ஏதோ சிக்கல் இருக்கிறது என்று நினைத்தேன். மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி என்றொரு அமைப்பு. அதன் இலக்கிய அமைப்பு புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம். கட்சியின் மாநிலச் செயலாளர் அய்யா ஆனைமுத்து. ஆனைமுத்துவின் பணிகளையும் சிறப்புகளையும் எடுத்துச் சொன்னேன். அவர் நடத்தும் கொள்கை ஏடு இது. நான் இந்த அமைப்பில் இருக்கிறேன். இந்த ஏட்டில் எழுதிகிறேன். என்றேன்.

இதில் உன் கவிதையையும் தமிழேந்தியின் கவிதை யையும் ஆனைமுத்து கட்டுரையையும் படித்தேன். மிகமிகச் சிறப்பு. உன்னைத்தான், உங்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். இந்தப் புத்தகம் எனக்கு தொடர்ந்து வரவேண்டும். அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

அப்பாடா… பெருமூச்சுவிட்டுக்கொண்டேன். சந்தா வுக்காக நான் நாயாய் அலைகிற விஷயம் அவருக்குத் தெரியாது. இப்படி உள்ளங்கையில் வந்து ஒரு சந்தா விழுகிறதே எனப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். அய்யா, ஆண்டுக் கட்டணமாக நூற்றி எண்பது ரூபாய் கொடுத் தால் மாதந் தவறாமல் உங்கள் வீட்டுக்கே அனுப்பி விடுவோம். வாழ்நாள் கட்டணமாக ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்றேன்.

கஸ்தூரி ஒரு இரண்டாயிரம் கொண்டா… என்று சொல்லி இரண்டு முகவரிகளைத் தந்து இரண்டு வாழ்நாள் கட்டணமாகக் கொடுத்தார். இனி உங்கள் இயக்கச் செயல்பாடுகள் எதுவாக இருந்தாலும் எனக்குத் தெரிவி. என் ஆதரவு இனி உங்களுக்கு எப்போதும் உண்டு என்று அன்று சொன்னவர் அதை கடைசிவரை விடாது காத்தார். பெரியார் சிந்தனைகள் இருபது தொகுதிகள் கொண்ட நூலை இரண்டு பெட்டிகள் வாங்கினார். அவ்வாறே ஆனைமுத்துக் கருத்துக் கருவூலம் நூல் பெட்டியையும் வாங்கினார். திருவண் ணாமலையில் நடைபெற்ற எல்லா கூட்டங்களுக்கும் தவறாது வந்து கலந்துகொண்டார். பொங்கல் மலர் உட்பட




எல்லா நிகழ்வுகளுக்கும் நன்கொடைகள் வழங்கினார். அவரது துணைவியாரும் மகன் கார்த்திகேயனும் அதே உணர்வு நிலையில் பயணித்தனர். அவரது பணி நிறைவுக்குப் பின் அவரது மனைவி கஸ்தூரி அம்மாவும் அதே மெய்யூர் பள்ளியில் தலைமையாசிரியாகப் பணியாற்றினார்கள். கடைசியாக 2019 சிந்தனியாளன் பொங்கல் மலர் வெளியீட்டிற்கு குடும்பத்துடன் வந்திருந்து அய்யா ஆனைமுத்துவுக்குத் தனிப்பட்ட விதமாக ரூபாய் பத்தாயிரம் வழங்கினார். இத்தனைக்கும் அவர் ஆனைமுத்து அய்யாவுடன் இத்தனை ஆண்டுகளில் மொத்தத்தில் ஒரு மணித்துளிகள் கூடப் பேசியிருக்க மாட்டார்.

செயவேல் அய்யா அவர்களுக்கு தமிழின் மீது ஆழ்ந்த ஈடுபாடு. மொழிக்கும் இனத்திற்கும் வந்துற்ற கேடுகளை எண்ணி மனம் புழுங்குபவர். அவர் தமிழ் படித்தவர் அல்ல. வரலாறும் ஆங்கிலமும் படித்தவர். ஆனால் தன்னைத் தமிழாய் உணர்பவர். சைவத்தில் ஆழ்ந்த பற்று உடையவர். மிகவும் நிதானமாகப் பேசுவார். கலகலவென்று பேசிப் பழகுபவர் அல்ல. அழுத்தமானவர். அவர் பொது மேடைகளில் பேசி நான் பார்த்ததில்லை. நான் நடத்திய கூட்டங்களில் பேசச் சொன்னதற்குக் கூட மறுத்துவிட்டார். அவர் செயல் வேல்.

ஒருநாள் என்னை அழைத்து, எவ்வளவோ நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தான் வாங்கும் சம்பளத்திற் குத் தன்னை ஒப்படைத்து கரைத்து வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நான் எதிர்பார்ப்பது அது அல்ல. ஆசிரியர் என்னும் மாண்புக்கு உரிய ஒரு ஆசிரியரை என்னுடைய பணிக்காலத்திற்குள் பார்க்கவேண்டும் என நினைத்தேன். நானேகூட அப்படியில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் உன்னைப் பார்க்கிறேன். பள்ளிக்கூட வேலையை நூறு விழுக்காடு சரியாகச் செய்வதோடல்லாமல்…. நூல் வாசிப்பது, கவிதைகள் படைப்பது, இயக்கப் பணி, சந்தா சேர்ப்பது, ஏழை மாணவர்களுக்கு முடிந்த அளவு உதவுவது என எதிர்பார்ப்பு இல்லாத உன் தொண்டு என்னைக் கூச

வைத்துச் சாட்டையால் அடிக்கிறது. நீ வந்துவிட்டாய். உன்னை என் வாழ்நாளில் சந்தித்தத்தைப் பெருமை யாகக் கருதுகிறேன். எனக்குப் பின்னாலும் ஒரு நல்ல ஆசிரியச் சமூகம் இருக்கிறது என்பதை உன்மூலம் பார்க்கிறேன். நான் நம்பிக்கையோடு போகிறேன் என்றார். அவர் சொன்ன வார்த்தைகள் மிகப் பெரியவை. அதை நான் பாராட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. என்னை மேலும் ஊக்கப்படுத்துவதாக எண்ணிக் கொன்டேன்.


அய்யா, இன்னும் இதுபோல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறாக்ள். நம் கண்ணில் படுவதில்லை. அவ்வளவுதான் என்று ஆறுதல் சொன்னேன். அவர் எதிர்பார்க்கும் கல்வி, வேளாண்மை, சுகாதாரம், அரசமைப்பு, சட்டம், உணவு, உணர்வு, உறவு என எதுவுமே இங்கு ஒழுங்கில்லை. இதையெல்லாம் எண்ணி புழுங்கிப் புழுங்கித் துடிப்பார். உண்மையில் அவரிடம் பேசினால் ஒரு நக்சலைட் நினைவுதான் வரும். ஆனால் எல்லாரிடமும் பேசமாட்டார். அந்த உள் அழுத்தமே அவரை நோய்க்குள் தள்ளியது. பத்துநாளாக மூளைச் சாவடைந்திருந்து 08.11.19 அன்று மரணித் திருக்கிறார். எழுபது வயதுதான் ஆகிறது. இன்னும் நிறைய திட்டங்கள் வைத்திருந்தார். மருத்துவமனைக்குப் போவதற்கு இரண்டு நாள்களுக்கு முன் வையவனைப் பார்க்கவேண்டும் என்று மகன் கார்த்தியிடம் சொல்லி யிருக்கிறார்.

அவரது எண்ணங்களைப் போற்றுவேன். அய்யாவை இழந்துவாடும் அவரது குடும்பத்தார் அம்மா கஸ்தூரி செயவேல், கார்த்திகேயன், செல்வி மற்றும் மருமக்கள்களுக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சி, புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் மற்றும் சிந்தனையாளன் ஏடு சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் வீர வணக்கத்தையும் தெரிவித்துக்கொள் கிறோம்.

## இரா.சி.கோவேந்தேன் தோற்றம்

காஞ்சிபுரம், செவிலிமேடு, பி.எஸ்.கே.நகர் ப.இராஜபகலவன்-ச.சிந்துஜா இணையருக்கு மகன் இரா.சி.கோவேந்தேன் பிறந்ததின் மகிழ்வாக மேற்படி இணையர் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கினர்.

## திருமழபாடி முனைவர் அ.ஆறுமுகம் அவர்களின் மணவிழாவின் மணிவிழா மலர் 07-09-2019 அன்று வெளியிடப்பட்டது




# தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் ஆணையத்தின் உறுப்பினர் ஆச்சாரி தெல்லோஜு-வே.ஆனைமுத்து சந்திப்பு




*வே.ஆனைமுத்து, தெல்லோஜு, ராம்பாபு*

**தே**சியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் ஆணையத்தின் உறுப்பினர் ஆச்சாரி தெல்லோஜு அவர்களை அனைத்திந்தியப் பிற்படுத்தப்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவையின் புரவலர்-தலைவர் வே.ஆனைமுத்து 4-1-2020 சனிக்கிழமை இரவு 9.45 மணி முதல் 10.30 மணிவரை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்தில் அறை எண்.103இல் நடந்தது. மேற்படி பேரவையின் பொதுச் செயலாளர் கலச.இராமசலிங்கம், சிந்தனையாளன் ஆசிரியர் குழு இரா.பச்சமலை, தமிழ்நாடு மத்திய அரசு பிற்படுத்தப்பட்ட அலுவலர் நலச் சங்கங்களின் பேரமைப்பின் பொதுச் செயலாளர் கு.தனசேகர், சென்னைவாழ் தெலுங்கு விசுவகர்மச் சங்கத்தின் தலைவர் இராம்பாபு ஆகியோர் சந்திப்பின்போது உடனிருந்தனர்.



*வே.ஆனைமுத்து, தெல்லோஜு, கலசம்*



*கு.தனசேகர், வே.ஆனைமுத்து, தெல்லோஜு, கலசம்*

இந்தச் சந்திப்பின் போது வே.ஆனைமுத்து, பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு தொடர்பாக வடஇந்திய மாநிலங்களில் தாம் மேற்கொண்ட விழிப்புணர்வு-பரப்புரைப் பயணம், பீகார், தில்லி, இராஜஸ்தான் மாநிலங்களில் நடத்திய போராட்டம், அன்றைய உள்துறை அமைச்சர் கியானி ஜெயில்சிங்கின் பங்களிப்பு ஆகியவற்றை எடுத்தரைத்தார். மேலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாசாரப் பங்கீடு, பதவி உயர்வில் இடஒதுக்கீடு, வளர்ந்த பிரிவினரை நீக்கும் அரசாணை ரத்து ஆகிய கோரிக்கைகள் குறித்தும் விளக்கிக் கூறினார். ஆணையத்தின் உறுப்பினர் அனைத்தையும் பொறுமையாகவும் கவனமாகவும் கேட்டுக் கொண்டனர்.

முன்னதாக வே.ஆனைமுத்து உறுப்பினர் தெல்லோஜு அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்; அடுத்து உறுப்பினருக்குச் சால்வை அணிவிக்க முற்பட்டபோது உறுப்பினர் தெல்லோஜு அவர்கள் முதலாவதாக தாம் ஆனைமுத்து அவர்களுக்குச் சால்வை அணிவித்துச் சிறப்பிக்க விரும்புவதாகவும் அதற்குத் தம்மை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஆனைமுத்து அவர்களுக்குச் சால்வை அணிவித்துச் சிறப்பித்தார். அதன் பின்னர் ஆனைமுத்து, தெல்லோஜு அவர்களுக்குச் சால்வை அணிவித்துச் சிறப்பித்தார்.

செய்தி : **கலசம்**

# சீர்திருத்தமும் இந்துமத ஸ்மிருதியும்

திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரி அவர்கள் தற்காலம் ஆலோசனையிலும் கமிட்டி விசாரணையிலும் இருந்து வரும் குழந்தை விவாகத் தடை மசோதாவைக் கண்டித்து ஒரு ஸ்ரீமுகம் வெளியிட்டிருக்கின்றார். அதை சுதேசமித்திரன் பிரசுரித்துள்ளபடி மற்றொரு பக்கத்தில் எடுத்துப் போட்டிருக்கின்றோம். அதன் காரண காரியங்களைப் பற்றி ஆராயுமுன் திரு. சத்திய மூர்த்தி யார் என்பதையும், அவர் எந்த முறையில் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பதையும் முதலில் கவனிப்போம்.

திரு. சத்தியமூர்த்தியை அவருடைய தனித்த ஹோதாவில் ஒரு சாதாரண மனிதர் என்பதாகச் சொல்லி விடலாமானாலும் அவருக்கு இம்மாதிரியான ஸ்ரீமுகங்கள் வெளியிட சந்தர்ப்பங்கள் அளித்ததும் அந்த ஸ்ரீமுகங்களை மக்கள் கவனிக்க நேர்ந்ததும், சில விஷயங்களிலாவது அவர் இந்திய மக்கள் பிரதிநிதி என்கின்ற தன்மை அடைந்திருக்கிறார் என்பதே அதாவது தேசிய அரசியல் இயக்கம் என்று சொல்லப்படுவதில் ஒரு குறிப்பிட்ட மனிதராகவும், சென்னை சட்டசபை என்பதில் ஜனப் பிரதிநிதி அங்கத்தினராகவும்,

அதிலும் படித்த மக்களின் பிரதிநிதியாகவும், அதா வது யுனிவர்சிட்டி பிரதி நிதியாகவும், சென்னை முனிசிபாலிட்டியின் ஒரு அங்கத்தினராகவும், மற்றும் பொது ஜனசேவை செய்கின்றவர் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவராகவும் இருக்கின்றார் என்பதே. அன்றியும், தன்னை ஒரு சீர்திருத்தக்காரர் என்றும், மதம், சமூகம் முதலியவைகளில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம்தான் என்றும் சொல்லிக் கொள்பவர்.

எனவே, இப்படிப்பட்ட ஒருவர், குழந்தைகள் புருஷன் பெண்ஜாதியான வாழ்வு நடத்தாதிருப்பதற்கும், குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவம் மாறாததற்கு முன்பே பிள்ளை பெறும்படியான நிலைமையை உண்டாக்காமல் இருப்பதற்கும், மற்றும் மனித சமூகத்தின் அறிவு, சரீர வளர்ச்சி, பலம் முதலியவைகள் விர்த்தி அடைவ தற்கும் அவசியமானதான மேல்கண்ட குழந்தை விவாகத் தடுப்பு மசோதா என்பதை எதிர்த்துப் போராடவந்து அதற்கு ஆதாரமாக பெரிதும் மதசம்பந்தமான ஆட்சேபனைகளையே எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இது மாத்திரமல்லாமல், மற்றும் இது போன்ற பல சீர்திருத் தங்களையும், மதத் தைச் சாக்காகக் கொண்டே ஆட்சேபித்து வந்திருக்கின்றார். இதற்கு உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுகின்றோம்.

அதாவது கொஞ்ச நாளைக்கு முன் சென்னை சட்டசபையில் திரு. முத்து லட்சுமி அம்மாளால் கொண்டுவரப்பட்ட சாமிபேரால் விபச்சாரத்திற்குப் பொட்டுகட்டும் வழக்கத்தடுப்பு மசோதாவையும் மதத்தைச் சாக்காகக் கொண்டே தடுத்து நின்றதும் யாவருக்கும் தெரிந்ததாகும்.

அந்தச் சமயத்தில் திரு. சத்தியமூர்த்தி அய்யர் சொன்ன ஆட்சேபனை, என்னவென்றால் பொட்டுகட்டு கின்ற வழக்கம், கேட்டைத் தரத்தக்கதானாலும், அதை நிறுத்தச் சம்மதிப்பது மதத்தில் பிரவேசிப் பதாகும் என்றும், இன்று பொட்டுகட்டுவதை நிறுத்த ஒப்புக்கொண்டால் நாளை மற்றொரு சீர்திருத்தம் வரும் என்றும், ஆத லால் அதற்குச் சம்மதிக்க முடியாதென்றும் சொல்லி விட்டார்.

பிறகு சென்ற வாரத்தில், சென்னையில் நடைபெற்றுவரும் விபச்சாரங்களை தடுக்க ஒரு மசோதா கொண்டுவர முயற்சித்த போதும் இதுபோலவே தடைக்கல்லாய் நின்றதுடன் அவர் சொன்ன சமாதானம் என்னவென்றால், விபசாரிகள் எவ்வளவு தான் ஒழுக்க ஈனமாக நடந்துகொண்டாலும் அவர்களும் நமது சமூகத்தார் அல்லவா? அப்படியிருக்க அவர்களின் விபச்சாரத் தொழிலை நிறுத்திவிட்டால் பிறகு அவர் கள் ஜீவனத்திற்கு என்ன செய்வார்கள் என்று சொல்லி ஆட்சேபித்தாராம்.

இம்மாதிரியாகவே எவ்விதமான சீர்திருத்தங்கள் வந்த போதிலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் ஆட்சேபித்து அவைகள் நிறைவேற்றப்படாமல் போவதாயிருந்தால் பிறகு எந்த விதத்தில் தான் நமக்குக் கதிமோட்சம் ஏற்படக்கூடும்? அன்றியும் பராசரர் ஸ்மிருதியும் மனுஸ் மிருதியும் நமது வாழ்க்கைக்கும் மதத்திற் கும் ஆதாரமென்பதை நாம் சகித்துக் கொண்டு அதைப் பின்பற்றுவதென்றால், அதை விட ஈன வாழ்க்கை வேறு எங் காவது ஏதாவது உண்டா என்று கேட் கின்றோம்.

இப்பேர்ப்பட்ட இந்துமதம் என்பதும் அதனுட் பிரிவுகள் என்பதான சைவ வைணவ முதலிய சமயங்கள் என்பதும், அதன் ஆதாரங்களான வேதம், சாஸ்திரம், ஸ்ருதி, ஆகமங்கள் என்பவைகளும், நமது மோட்ச சாதனத்திற்கு ஏற்பட்டவை என்றும், உலகத்திலுள்ள மற்ற மதங்களுக்கெல்லாம் சிறந்தது என்றும் சொல்லிக்கொண்டு அச்சமயங்களைக் காப்பாற்ற வெளிவந்திருக்கும் வீரர்கள், சுயமரியாதை இயக்கம் இந்து மதத்தைக் கெடுக்கின்றது.

வைணவ மதத்தை வைகின்றது, சைவ சமயத்தை ஒழிக்கின்றது என்று ஊளையிட்டு கொண்டிருக்கின்ற வர்களே இம்மாதிரி சீர்திருத்தத்தைப் பற்றியாவது கடுகளவு கவலையாவது கொள்ளுகின்றார்களா என்பதைப் பொது ஜனங்கள் யோசித்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

அன்றியும் மத சமயக்காரர்கள் என்பவர்கள் சம்பந்தன் சமணர்களைக் கழுவேற்றினது பொய்யா மெய்யா? முதலை தான் உண்ட பாலகனை 14 வருஷம் வரை வயிற்றில் வளர்த்து வெளியில் கக்கினதை ஒப்புக் கொள்ளுவாயா? மாட்டாயா ராமன் கடவுளா மனிதனா? ராவணன் யோக்கியனா? ராமன் யோக்கியனா? சிவன் பெரியவனா, விஷ்ணு பெரியவனா? விஷ்ணுவுக்கு வடகலை நாமமா, தென்கலை நாமமா? சூரியனுடைய ரதத்திற்கு எட்டு குதிரையா? பதினாறு குதிரையா? விதி பெரியதா மதி பெரியதா? இதுபோன்ற விசயங்களில் மதபக்தியையும் அறிவு சக்தியையும் காண்பித்துக் கொண்டு சமயத் தொண்டையும், தெய்வத் தொண்டையும் செய்துகொண்டும்,

இம்மாதிரியான விஷயங்களிலெல்லாம் பார்ப்பனர்கள் சொன்னதை தெய்வவாக்கு என்பதாகவும், அதை மறுத்தால் தங்களுக்கு எந்த வித யோக்கியதையும் இல்லாமல் போய்விடும் என்று பயந்து கொண்டும் பாமர மக்களை மிருகங் களாக்கி விடுகின்றார்கள். ஆதலால் இம்மாதிரி மதமும் சமயமும் நமக்கு எதற் காக வேண்டும்? இவை மக்களுக்கு நன்மையளிக்கும் சமயமாகுமா? என்பதாக கேட்க ஆரம்பித்தால் அதை நாஸ்திகம் என்று சொல்லி விரட்டியடிக்கப் பார்க் கின்றார் களேயொழிய மனிதத் தன்மை அறிவுத் தன்மை என்பதை ஒரு சிறிதும் காட்டு வதே கிடையாது. தவிர திரு. சத்தியமூர்த்தி, பால்ய விதவைகளின் கொடுமையையும் சிறு குழந்தைகள் பிள்ளை பெற்று தாயாகி விடுவதால் வரும் கெடுதியையும் நான் அறிவேன் என்று கொடு மைகளையும் கஷ்டங்களையும் ஒப்புக்கொள்ளுகின்றார்.

ஆனால் கூடவே அதன் கீழ் 12 வயதுக்குள் பெண்களுக்குக் கல்யாணம் செய்யாவிட்டால் பாவம் வரும் என்று பராசர ஸ்மிருதி யில் சொல்லி இருக் கின்றது என்கின்றார். கொடுமையையும் கெடுதி யையும் நீக்குவது பாவமாகுமானால் அந்தப் பாவத்திற்குப் பயப்படவேண்டுமா? என்றுதான் கேட்கின்றோம்,

அன்றியும் திரு. சத்தியமூர்த்தி ஆதாரம் காட்டும் பராசர ஸ்மிருதியின் விவாகப் பிரகரணத்தில், 8 வயது பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் சுவர்க்க லோகத்தையும், 9 வயதுப்பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் வைகுண் டத்தையும், 10 வயதுப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் பிரம்ம லோகத் தையும் அடைகிறான்; அதற்கு மேற்பட்டு பெண்ணை விவாகம் செய்து கொடுப்பவன் ரவுரவதி நரகத்தை அடைகிறான் என்று எழுதியிருக்கின்றது.

ஆனால், திரு. சத்தியமூர்த்தி 10 வயதுக்கு முன் கல்யாணம் செய்யும் வழக்கம் இப்போது நின்றுபோய்விட்டது என்று சொல்லு கின்றார். இந்தப்படி பார்த்தால் இப்போது பெண் பெற்றவர்கள் எல்லோரும் ரவுரவாதி நரகத்திற்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள் என்று தானே சொல்ல வேண்டும். எனவே இனி 16 வயதில் கல்யாணம் செய்பவர்களுக்குப் புதிதாகப் பாவம் ஏது என்று கேட்கின்றோம்.

தவிர திரு. சத்தியமூர்த்தி பயப்படுவதாக வேஷம் போடும் பராசர ஸ்மிருதியின் யோக்கியதையைக் கவனிப்போம்.

10 வயதுக்கு மேற்பட்ட பெண்ணுக்குக் கல்யாணம் செய்யா விட்டால் ரௌரவாதி நரகத்தை அடைய வேண்டும் என்று சொல்லும் ஸ்மிருதியானது அதே ஸ்திரிகள் விஷயத்தில் சொல்லுவது என்ன என்றால், ஸ்திரிகள் பூமிக்குச் சமமானவர்கள்.

அவர்கள் குற்றம் செய்தால் தூஷிக்கக் கூடாது. அவர்கள் என்ன தவறுதல் செய்தாலும் அவர்களை விலக்கிவிடக் கூடாது. சண்டாளன் வசித்த பூமியை எப்படிச் சில சுத்திகள் செய்து அதில் நாம் வசிக்கின்றோமோ, அதுபோல் ஸ்திரிகள் சண்டாள சம்பந்தம் வைத்துக் கொண்டாலும் அவர்களைச் சுத்தி பிராயச்சித்தம் செய்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கின்றது.

அந்த பிராயச்சித்தம் என்னவென்று பார்ப்போமானால் அதாவது ஒரு பிராமண ஸ்திரீ தன் மனதறிந்து ஒரு சண்டாள னுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டால் சாந்திராயண கிருச்சிரம் செய்துவிட்டால் சுத்தியாகிறாள் என்று சொல்லியிருக் கின்றது. இது பராசர ஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் 7வது அத்தியாயம் 23வது சுலோகம். சாந்திராயண கிருச்சிரம் என்பது கிருஷ்ண பட்சம் முதல் அமாவாசை வரை யில் தினம் ஒரு பிடிசாதமாகக் குறைத்துக் கொண்டு வந்து ஒரு நாள் பட்டினி விரதமிருந்து, மறுபடியும் ஒவ்வொரு பிடி விருத்தி செய்து சாப்பிட வேண்டியது இது 7வது காண்டம் 2 வது சுலோகம்.

ஒரு பிராமண ஸ்திரீ பாவ சீலர்களான சூத்திரர்களால் அனுபவிக்கப்பட்டால் அவள் பிரஜாபத்திய கிருச்சிரம் செய்வ தாலும் ருது ஆவதாலும் சுத்தி அடைகின்றாள் என்று சொல்லு கின்றது (இது மேல்படி காண்டம் மேல்படி அத்தியாயம் 24வது சுலோகம்) பிரஜாபத்திய கிருச்சிரம் என்பது 3 நாள் காலையிலும் 3 நாள் மாலையிலும் புசித்து 3 நாள் யாசிக்காமல் வந்ததைப் புசித்து 3 நாள் உபவாசமிருத்தல் (இது பராசர ஸ்மிருதி 7வது காண்டத்தில் 9வது அத்தியாத்தில் சொல்லப்படுகின்றது.) இதுவும் செய்வதற்குக் கஷ்டமாயிருக்குமானால் 12 பிராமணர்களுக்கு சாப்பாடு போட்டால் போதும் (இதுவும் மேற்படி அத்தியாயம்.)

இன்னும் இதுபோலவே மகாபாதகம் என்று சொல்லும் படியான குருபத் தினியைப் புணர்ந்தவன் ஒரு பசுவையும் எருதையும் பிராமணனுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான் (மேற்படி காண்டம் அத்தியாயம் சுலோகம் 13) இன்னும் இதைவிட மகாபாதகமான அனேக காரியங்களுக்கும் ஒரு வேளை இரண்டு வேளை பட்டினி கிடப்பதும் பிரா மணனுக்குக் கொடுப்பதுமே பிராயச்சித்த மாய்ச் சொல்லப்படுகின்றது. அதிலும் பிராமணன் சூத்திரன் என்பதாகப் பிரித்து அதற்குத் தகுந்தபடி பிராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு வேதம் ஓதின ஒரு பிராமணன் ஒரு பசுவைப் புணர்ந்தால் ஒரு பசுவைப் பிரா மணனுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான். இதே காரியத்தை ஒரு சூத்திரன் செய்தால் 4 பசுவையும், 4 எருதையும் பிராமண னுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான் என்று சொல்லுகிறது. (மேற்படி அத்தியாம் 14வது சுலோகம்)

எனவே இப்பேர்ப்பட்ட காரியங்களுக் கெல்லாம் எவ்வளவு சுலபமாக பிராயச் சித்தம் சொல்லி இருக்கும்போது ஒரு பெண்ணை 12 வயது ஆன பிறகு பிறந்து கல்யாணம் செய்வ தால் ஏற்படும் பாவத் திற்கு மிகவும் சுலபமான பிராயசித்தம் தானே இருக்கக்கூடும்.

ஆதலால் பராசர ஸ்மிருதியை கடவுள் வாக்கு என்றே நம்புகின்றவர்களுக்குக் கூட குழந்தை விவாகத் தடுப்பு மசோதாவில் பிரமாதமான கெடுதி ஒன்றும் வந்துவிடாது என்றே சொல்லு வோம். அதிகமான தண்டனை விதித்திருந்தாலும் அது பாலும் பழமும் மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு ஒரு வேளை பட்டினி கிடக்கவேண்டும் என்று தான் இருக்கக் கூடும்.

ஆதலால் உண்மையானதும் அவசியமானதுமான சீர் திருத்தங்களை விரும்புகின்றவர்கள் மதம், சமயம், சாஸ்திரம், சாமி என்கின்ற பூச் சாண்டிகளுக்கு ஒரு சிறிதும் பயப்படக் கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

**- குடிஅரசு - தலையங்கம் - 21.10.1928**

# வரலாறு

**வே. காசிநாதன்**

நம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களுடைய உணவு, உடை, பழக்கவழக்கங்கள் யாவை என்பவற்றை அறிந்து கொள்வது வரலாறு என்று கருதப்பட்டது. இப்போது நடைபெறும் மெட்ரிக் பள்ளிகளில் ஆங்கிலம், அறிவியல் ஆகிய பாடங்களுக்குத் தரும் முக்கியத்துவம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களுக்குத் தருவதில்லை; இது வருந்தத்தக்க நிலைதான்.

நாடு, கட்சி, மனிதவாழ்வு எனப் பலவற்றிலும் வரலாறு உண்டு. இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடு என்பன போன்ற பகுதிகளைப் பல மன்னர்கள் ஆண்டு வந்தனர். பின்னர் முகலாயர், ஆங்கிலேயர் என்பவர்களால் ஆளப்பட்டு, 1947 முதல் சுதந்தரம் பெற்று, தேர்தல் முறையில் மக்களை ஆளும் நிலைப்பாடு உண்டு. இந்த முறையிலும் மாற்றங்கள் வர வாய்ப்புண்டு. 2019 டிசம்பர் இதழில் தோழர் ஆனைமுத்து அவர்களால் தலையங்கக் கட்டுரை விரிவான தகவல்களைத் தந்துள்ளது; சிந்திக்க வேண்டுகிறேன்.

கட்சி வரலாறு என்னும் போது தேசியக் காங்கிரசு வெள்ளையார்களால் தோற்றுவிக்கப்பட்டு, பின் எண்ணற்ற கட்சிகள் நடைமுறையில் உள்ளன. காங்கிரசுத் தலைவர் பொறுப்பில் இருந்த பெரியார் மனிதநேயம் காக்கத் தனிக்கட்சி ஆரம்பித்து, அதுவும் இப்போது பல பிரிவுகளாக உள்ளது. கட்சிகளின் வரலாறுகளை-தத்துவங்களை இப்போது மக்கள் பலர் சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்பதில்லை.

மனிதவாழ்வு என்பதின் வரலாற்றைக், கற்கால மக்கள் முதல் இன்றைய அறிவியல் வாழ்வு வரை எழுத நீளும். ஆசிரியர் பணி புரிந்தவர் என்ற நிலையில் 1940-இல் பிறந்து, 1960-இல் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து 1998-இல் பணிநிறைவு பெற்ற நான், கல்வி நிலை என்பதன் மாறுபாடுகளை - வரலாற்றினைத் தெரிவிக்க விழைகிறேன். இக்கருத்தினைக் கூறும்போது சுயவிளம்பரம் என்று எண்ணக் கூடாது என்று அன்போடு கூறிக்கொள்ளுகிறேன்.

**1960-இல் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் அப்போதிருந்த நகராட்சியின் ஆசிரியர் பணியில் சேர, சுமார் 400 பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுத்தனர். அவர்கள் நேர்காணல் நிகழ்வுக்கு வந்தனர். அங்கிருந்த அலுவலர், ஆரம்பப் பள்ளியில் பணிபுரிய (2), உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிய (3) ஆதி திராவிடர் நலப் பள்ளியில் பணிபுரிய விருப்பப் படுவோர் தனித்தனியே விண்ணப்பங்கள் எழுதிக் கொடுங்கள் என்றார். அதன்படியே விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அத்தனை பேருக்கும் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது.**

இப்போது, இலட்சக்கணக்கில் ஆசிரியர் பணிக்குப் பயிற்சி பெற்று 10, 15 ஆண்டுகளாக ஏங்கித் தவிக்கும் நிலை - இப்படி எல்லாத் துறைகளிலும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் ஏங்கித் தவிக்கும் நிலை.

1960-இல் இருந்த பாடங்களுக்கும் தற்போதுள்ள பாடங்களுக்கும் பல மாற்றங்கள் உண்டு. அவற்றை அடுத்துவரும் சிந்தனையாளன் இதழ் பிப்ரவரியிலிருந்து எழுதுகிறேன்.

## தோழர் மா.செ. தமிழ்மணி அவர்களின் துணைவியார் நாகம்மையார் மறைவு



கன்னியாகுமரி திருவள்ளுவர் அறக்கட்டளையின் மறைந்த முன்னாள் தாளாளர் தோழர் மா.செ. தமிழ்மணி அவர்களுடைய துணைவியார் நாகம்மையார் அவர்கள் 20.12.2019 அன்று மறைந்தார். அவரின் மறைவிற்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

## வளர்ச்சி நிதி உருபா 10,000/-

எ.வாமணன் இந்துஸ்தான் லீவர் காலனி பம்மல், சென்னை-75 அவர்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- வழங்கியமைக்கு சிந்தனையாளன் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தேவதாசி ஒழிப்புச் சட்டம்

- பெரியார் ஈ.வெ.ரா.

கோயில்களில் பெண்களை பொட்டுக்கட்டுவதைத் தடுக்க சட்டம் செய்யவேணுமாய் திரு.முத்துலக்ஷிமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தை சர்க்கார் நமக்கு அனுப்பி அதன் மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்காக சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி அவர்களையே பொது மகளீர்களாக்கி நாட்டில் விவசாரித்தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றி யும் நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்புக்கே உரியது என்பதாகி, இயற்கையு டன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரீகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ, கோரின அரசாங்கமாகவாவது ஒன்று இருந்தால் இந்த இழிவான கெட்ட பழக் கம் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும், இருந்து வர ஒரு க்ஷண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்கா தென்றே சொல்லுவோம்.

ஆனால் நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடி புகவும் நிலை பெறவும், நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவி யாகவும் இருந்து வந்ததால் அப்பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால் அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து (வெள்ளைக்காரர்கள்) தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் பட்டு விட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர் களுக்கு விரோதமாய் சீர்திருத்தத் துறையிலாவது, மனிதத் தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆனால் இப்போது கொஞ்ச காலமாய் அப்பார்ப்பனர்களின் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கண்டுபிடித்து அவர்களது யோக்கியதைகளை அடியோடு வெளியாக்கி சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக் காரர்களை மிரட்டக்கூடிய சமயம் மிரட்டியும், ஆதரிக்கக் கூடிய சமயம் ஆதரித்தும் பார்ப்பனர்களின் செல்வாக்கை ஒழித்து நமது சத்தியத்தையும் தீவிர ஆசையையும் காட்ட ஆரம்பித்துவிட்டதால், இப்போது ஏதோ சிறிது அளவுக்காவது சர்க்காரார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையின் பலனேதான் இப்போது நமது கொள்கைகள் சிலது நாட்டில் பிரசாரம் செய்யவும் செல்வாக்குப் பெறவும் இடம் ஏற்பட்டதும்; சட்டசபையில் இது சமயம் ஒரு முடிவை பெற்று தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டுப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு வர நேர்ந்ததுமாகும். நிற்க, இப்போது திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும், பொட்டுக் கட்டுவதை ஒழிக்கும் இந்த மசோதாவானது வெகு காலமாகவே ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களிலும் பொதுமகா நாடுகளிலும் கண்டித்துப் பேசப்பட்டிருப்பதுடன் இம்மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. இது சம்மந்தமாக, திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கமாவது. தேவதாசி மசோதா "இந்த சமூகக் கொடுமையை ஒழிக்க ஆரம்பித்த கிளர்ச்சியானது 1868 வருஷ முதல் நடைபெற்று வருகிறது. 1906, 1907 வருஷம் உலக தேசீய மகாநாட்டில், இந்தக் கொடிய கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்காகப் பல மாகாண சர்க்கார் அபிப்பிராயங்களையும் அறிந்து தம்மால் கூடியவரை ஒழிப்பதென முடிவு செய்ததினின்று, இந்தியா கவர்ன்மெண்டும், இந்த தேவதாசி மசோதாவில் அதிக சிரத்தைக் காட்டி வந்தது.

1912 வருஷம் பழய இம்பீரியல் சட்ட நிரூபண சபையில் மூன்று இந்திய அங்கத்தினர்கள், கனம் மாணிக்ஜிதாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியவர்கள், இந்த கொடிய பழக்கத்தை ஒழிப்பதற்கு இதே எண்ணத்தோடு வேறே மூன்று மசோதாக்கள் கொண்டு வந்தனர். இந்திய சர்க்கார் உள்நாட்டு சர்க்காருக்கு இந்த மசோதாவை அனுப்பி, அவர்களது அபிப்பிராயம் தந்த உடன் 1913 வருஷம் செப்டம்பர் மாதம் தாங்களாகவே ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் அம்மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அவர்களது ரிப்போர்ட்டையும் 1914 வருஷம் மார்ச்சு மாதம் பெற்றார்கள். அந்த ரிப்போர்ட் மறுபடியும் இப்போதைப் போலவே பொதுஜன அபிப்பிரா யத்துக்கு விடப்பட்டது. இம்மசோதாவை நிறைவேற்றுவதில் எல்லோருக்கும் பூரண எண்ணமிருந்த போதிலும், அத்தகைய பெண்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது போன்ற சில சில்லரை விவாதங்கள் கிளப்பிவிடப்பட்டதால் அம்மசோதா தானாகவே அது சமயம் மறைந்து விட்டது. அதன் பின்னர் மகாயுத்தக் கிளர்ச்சியினால் அது கவனிக்கப்பட முடியாமல் போயிற்று.

பிறகு 1922 வருஷம் டாக்டர் கோர் மீண்டும் அதை இந்திய சட்டசபையில் கொண்டு வந்தார். தீர்மானத்தின் மேல் விவாதம் நிகழ்ந்து கடைசியாக அது மறுபடியும் பொது ஜன அபிப்பிராயத் திற்கு பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற பிரரேபனை அதிகப் படியான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது. பிறகு மேல்படி 1922 -ம் வருஷத்திய தீர்மானத்தின் மீது 1924-ம் வருஷம் அதை சட்டமாக்கப்

பட்டதோடு, அதை அனுசரித்து இந்தியன் பினல் கோடு 372, 373 செக்ஷன்கள் திருத்தப்பட்டன. அதன் சட்டம் 1925 -ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அமுலுக்கு வந்தது. ஆதியில் 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குப் பொட்டுக் கட்டுதல் கூடாதென்றே சாஸ்திரத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் பொட்டுக் கட்டப்பட வேண்டிய பெண் சாஸ்திரப்படி கன்னிகை யாயிருக்க வேண்டு மாதலால் 14 வயதிற்குள்தான் இந்த சடங்கு செய்வது வழக்கமாக இருந்து வந்தது. அதாவது எந்தப் பெண்ணையும் 14 வயதிற்கு மேல் பொட்டுக்கட்ட எந்தக் கோயில் அதிகாரி யும் அனுமதிப்பதில்லை. ஆனால் இப்பொழுது மேற்படி சட்டம் வந்தபிறகு 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கு பொட்டுக்கட்டப்பட்டால் கோயிலதிகாரிகள் குற்றவாளிகள் ஆவதோடு அந்த விதமாக அனேக கேஸ்கள் நடந்து அந்த 25வது சட்டப்படி தண்டனையும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே வைதீகர்களது அபிப்பிராயப்படி பார்த்தாலும்கூட, சாஸ்திரப்படி 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு கோவில்களில் பொட்டுக்கட்ட மத அனுமதியில்லையென்று தெரிகிறது. இந்தியன் பினல்கோடு படி ஒரு மைனர் பெண்ணைப் பொட்டுக் கட்டுவது குற்ற மென்றாலும், பேராசையுள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக் கட்ட கோவிலினிடமிருந்து உத்திரவு பெற்று விடுகிறார்கள். இது வியபசாரத்துக்கு அனுமதி கொடுத்த தாகு மேயன்றி வேறில்லை.

பொதுஜன அபிப்ராயம் இதை சட்டமாக்க அனுகூலமாயே யிருக்கிறது. பத்திரிகைகளில் இதை ஆதரித்து எழுதியும் பொதுக் கூட்டங்களில் ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், சுமார் 13 வருஷத்துக்கு மேற்பட்ட ஆண் பெண் சங்கங்களில் அதை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றியும் இந்தக் கொடிய பழக்கத்தினால் அல்லலுறும் சமூகத்தினரே இதை சட்டமாக்க வற்புறுத்தி எழுதியும் இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டு முனிசி பாலிட்டிகளிலும் தங்களது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர். இவ்வாறெல்லாமிருக்க இச்சட்டத்திற்குப் பொது ஜன அபிப் ராயத்தை அறிய விரும்புவானேன்? என்பது விளங்கவில்லை. இந்த நாள்பட்ட கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபனையோ எதிர் அபிப்பி ராயமோ இருக்கவே முடியாது.

இந்தியத் தலைவர்கள் கூறியிருப்பது போல் தேவதாசி என்று ஒரு வகுப்பு இருப்பது இந்து சமுதாயத்திற்கே இழிவானது மல்லாமல் இந்து மதத்திற்கே பெரும் பழியுமாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு, பெண்ணுலகிற்கே ஏற்பட்டதாகுமாகையால் இவ்வழக்கம் பெண் களின் அந்தஸ் தையும் கௌரவத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதாயிருக்கிறது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ, சமூகத்தையோ விபசாரத் திற்கு அனுமதி கொடுப்பதும், பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். சிறு குழந்தைகளிலிருந்தே இத்தகைய துராசார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதிகளையே மீறியதாகும். எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இனி இதைப்பற்றி பொது ஜனங் களுடைய அபிப்பிராயத்தைத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை.

தவிர இதுவிஷயத்தில் சாஸ்திர சம்மந்தமான வைதீகர் களின் ஆட்சேபணைக்கும் இடமில்லை. ஏனெனில் சாஸ்திரத்தில் 14 வயதுக்கு முன் கன்னிப் பெண்ணாய் இருக்கும் போதுதான் பொட்டுக் கட்ட வேண்டும் என்று இருக்கின்றது. இந்தியன் பினல்கோட் 372, 373 செக்ஷன்களின்படியோ 18 வயதுக்குள் பொட்டுக் கட்டக்கூடாது என்றும், கட்டினால் ஒரு வருஷக் கடினக் காவல் தண்டனையும் அபராதமும் என்றும் இருக்கின்றது. ஆகவே இது விஷயத்தில் வைதீகமும் இந்து மதமும் 1924 வருஷத்திலேயே ஒழிந்துவிட்டது. இந்நிலையில் இப்போதைய வைதீகர்கள் என்பவர்கள் இதை ஆட்சேபிப்பதானால் ஒன்று அவர்களது சாஸ்திரம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்; அல்லது தாசிகள் மூலம் தங்கள் வகுப்பார்களில் சிலர் வயிறுவளர்ப்பது கெட்டுப் போகுமே என்கின்ற ஜாதி அபிமான மாக இருக்க வேண்டும். அடுத்தாப்போல் பொது ஜனங்கள் எந்த விதத்திலாவது இந்தச் சட்டத்தை ஆட்சேபிப்பார்களா என்று எண்ணுவதும் ஒன்று முட்டாள்தன மாகவோ அல்லது யோக்கியப் பொறுப்பற்றத் தன்மையாகவோதான் இருக்க வேண்டும். ஏனெனில் இந்து சமூகத்தில் கடவுள் பேரால் மதத்தின் பேரால் விவசாரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று எந்த சமூகத்தாரோ, தேசத்தாரோ கருதுவார்களானால், அவர்களைப் போல் காட்டுமிராண்டிகளோ கெட்டவர் களோ இருக்கவே முடியாது. மற்றபடி எந்த சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்க வேண்டுமென்று கேட்பார்களே யானால் அவர்களைப் போல் சுயமரியாதையற்றவர்களும் இழிகுலமக்களும் வேறு யாரும் இருக்க முடியாது. எந்தப் பெண்களாவது இந்தத் தொழிலில் ஜீவிக் கலாம் என்று கருதி அதற்காக சுவாமியையும் மதத்தையும் உதவிக்கு உப யோகப்படுத்த நினைத்தால் அவர்களைப் போல் ஈனப்பெண்கள் வேறு எங்கும் இருக்கவே முடியாது. ஆகவே இந்தச் சட்டம் சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமு மாகும். ஆனால் அந்தப்படி நிறைவேற்றப்படாமல் இருக்க சட்ட மெம்பர் ஆட்சேபணைகளைக் கிளப்பி இதைப் பொது ஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தடைப்படுத்தி விட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ் கட்சி அங்கத் தினர்கள் ஓட்டுக் கொடுத்தது அவர்களுக்கு மிகுதியும் மானக்கேடான காரியமாகும். அக்கட்சியார்கள் இந்த காரியத்தைகூட செய்ய முடியவில்லை யானால் பின் என்ன வேலை செய்யத்தான் அந்த சட்ட சபையை நடத்திக் கொண்டி ருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகவில்லை. காங்கிரஸ்காரர் கள் சட்டசபையில் இல்லாததால் இச்சட்டம் நிறைவேற்றாமல் போயிற்று என்று திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் நமக்கு எழுதி இருப்பதைப் பார்க்க நமக்குத் தாங்க முடியாத அவமானமாகவே இருந்தது.

எப்படியானாலும் அடுத்த சட்ட சபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால் சர்க்காரின் யோக்கியத்திலும் ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக் கூட மதிப் பும் நம்பிக்கையும் இருக்காதென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.03.1930**

## இவற்றிக்குப் பொறுப்பேற்றவர்கள் இவர்களுக்கு ஏன் பொறுப்பேற்கவில்லை! சிந்தியுங்கள்!

இந்தியாவில் இந்துமதக் கொள்கைப்படி கோவில் யானைகளுக்குப் புத்துணர்வு கொடுக்கக் கோடிக்கணக் கில் நிதி ஒதுக்கி முகாம் நடத்தும் ஒன்றிய மாநில அரசுகள் ஏன்? உழவுத் தொழிலாளிகளைக் காப்பாற்ற தயங்குகின்றன. இவற்றைப் பராமரிப்பதால் மக்களுக்கு என்ன பலன்? இறந்தால் மட்டுமே எலும்பும் தந்தமும் கைவினைப் பொருள்கள் செய்யப் பயன்படு கின்றன. யானைகள் வண்டி இழுப்பதில்லை. உழவனுக்குப் பயன்படுவதில்லை. பிச்சை எடுக்க மட்டுமே பயன்படுத்தப்படு கின்றன. இப்பொழுது அனைத்து வேலைகளுக்கும் இயந்திரங் கள் பயன்படுகின்றன. விவசாயமும் எந்திர மயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும் பசுக்களைக் குளிரிலிருந்து பாதுகாக்க அரசு போர்வைக்கு நிதி ஒதுக்கி பாதுகாக்கிறது. இவற்றுக்கு மட்டும் கரிசனம் காட்டக் காரணம் கைபர் கணவாய் வழியாக வந்த வந்தேரி ஆரியர்கள் பிச்சை எடுக்க இவை அதிகம் பயன்படு கின்றன. அதனால்தான் இந்து என்ற போர்வையை நம் மீது போர்த்தி அவர்கள் மட்டும் பாதிக்கப்படாமல் இருக்க நம்மை பயன்படுத்து கிறார்கள்.

உழவனின் நலனுக்கோ உழவனுடன் வாழும் ஆடு, எருமை, பன்றி, எருது, கழுதை, நாய், ஒட்டகம், வாத்து, கோழி போன்ற பல உயினிரினங்களுக்குப் புத்துணர்வு முகாம் நடத்தவில்லை.

உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரம், உரம் மற்றும் இடுபொருள்களில் விலையை உயர்த்தி விட்டு விளை பொருள்களின் விலையைக் குறைத்து உழவுத் தொழிலுக்கு உலை வைத்துவிட்டனர்.

“நீர் இன்றி அமையாது உலகு” அதுபோல் நீர் இன்றி விளையாது பயிர்கள். ஆனால் நீர் ஆதாரங்களைப் பெருக்கி பாதுகாக்க ஒன்றிய, மாநில அரசுகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அதை வைத்து அரசியல் மட்டுமே செய்கின்றனர்.

கரும்பிலிருந்து எடுக்கும் எத்தனாலை மாற்றி எரி பொருளாகப் பயன்படுத்தலாம். பிற நாடுகளிடம் எரி பொருளை எதிர்பார்க்கத் தேவையில்லை. விவசாய வருமானத்தைப் பெருக்குவோம் என்று ஜீரோ பட்ஜெட்டை அறிவித்து இயற்கை வேளாண்மை முறையை ஊக்கப்படுத்துவோம் என்றும் அறிவித்துவிட்டு எதையும் செயல்படுத்தவில்லை. இது எப்படி இருக்கு என்றால் “கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது” போல் உள்ளது. விவசாய தொழில் நலிந்து வருவதற்கு யார் பொறுப்பு? வேளாண் விளைபொருள்கள் உற்பத்தியாளர்களே சிந்தியுங்கள் செயல் படுங்கள்.

- உழவர் மகன் **ப.வ.வடிவேலு**

### சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - சனவரி-2020

| | | |
|---|---|---|
| **இராமகிருஷ்ணன்** | டோல்கேட் | 10000/- |
| **வி.ஜெயராமன்** | தில்லைநகர் | 5000/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **சரோஜா சாமி கங்காதரன்** | உறையூர் | 1000/- |
| **ராஜாராம் கலைமணி** | வருமானவரி ஆய்வாளர் | 800/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **ச.சம்பந்த சிவகுமார்** | | 500/- |
| **துரை.பாலகிருட்டிணன்** | சென்னை | 500/- |
| **ஞா.சீரிதரன்** | சென்னை | 500/- |
| **வை.பார்த்திபன்** | பம்மல் | 500/- |
| **புலவர்.த.வேலு** | பம்மல் | 500/- |
| **கு.சீனிவாசன்** | பம்மல் | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி.வா.அங்கமுத்து** | திருச்சி | 200/- |
| **மு.சந்தானம்** | உறையூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி-2020

| | | | |
|---|---|---|---|
| **ச.சம்பந்த சிவகுமார்** | காஞ்சிபுரம் | .... | 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**